திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன்.

மாலை : 9   25—11—55 : வெள்ளி : விலை 3 அணா   மலர் : 15

'டில்லி தேவதைகளிடையே புல்கானின்-குருசேவ்!'

கண்ட காட்சிகளும் - தந்த அறிவுரைகளும்!

புல்கானின் கரி பூசினர்! குருசெவ் அடிக்காமல் அடித்தார்!

ருஷ்ய நாட்டுப் பிரதமர் புல்கானின், ருஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் குருசெவ் ஆகிய இரு தலைவர்களும்-தங்கள் குழுவினருடன் 18-11-55 அன்று டில்லி வந்து சேர்ந்தனர். விமான நிலையம், இந்தியக் குடியரசுத் தலைவரின் மாளிகை; இந்தியப் பிரதமரின் அலுவலகம் ஆகிய இடங்களில் ருஷ்யநாட்டுத் தலைவர்களுக்கு மகத்தான வரவேற்பு-விருந்துபசாரங்கள் நடைபெற்றன. இத்தலைவர்கள் இந்தியாவுக்கு வருவது இதுதான் முதன் முறை யென்பதாலும், அண்மையில் இந்தியப் பிரதமர் ருஷ்யா சென்றிருந்தபோது அளித்த வரவேற்புக்கு சமமாக அளிக்க வேண்டும் என்ற திட்டத்தினலும். இந் நிகழ்ச்சிகள் தனிச் சிறப்புடன் விளங்கின.

ருஷ்ய நாட்டுப் பிரதமர் புல்கானினும், இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரும் சம்பிரதாய முறைப்படி தங்கள் தங்கள் சர்க்காரின் சார்பில், ஒற்றுமை யுணர்ச்சியையும் கருத்தையும் பரிமாறிக் கொண்டனர்!

ருஷ்யத் தலைவர்களை மகிழ்விக்க, பட்டம் விடும் கூத்துகளும் பாட்டுக் கச்சேரிகளும் வெளுத்துக் கட்டப்பட்டனவாம். இப்படி செய்யப்பட வேண்டியதும் முறைதானே.

இவ்வித வரவேற்பு நிகழ்ச்சிகளைக் காண்பித்துக் கொண்டே டில்லியிலும் அதைச் சுற்றிலுமுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனராம் சோவியத் தலைவர்கள்.

அந்த சமயம், தோழர் குருசெவ், இம்மாதிரி சிறப்பு வாய்ந்த கட்டிடங்களைக் கட்டிய மன்னர்களைப் பாராட்டுவதாகவும், அதே சமயத்தில் அந்த மன்னர்களின் ஆதிக்கத்தை ஒழித்த மக்களைப் பாராட்டுவதாகவும் கூறினராம்!

இப் பெரிய கட்டிடங்களைக் கட்டிய மன்னர்கள், அடிமைகளாயிருந்தே பின்னர்மன்னர்களானுர்கள் என்று தோழர் குருசேவிடம் கூறப்பட்டபோது, "அவர்கள் முதலில் அடிமைகளாயிருந்த மக்களைக் கிளப்பிவிட்டு, சுதந்திரம் கிடைத்த பிறகு அவர்கள்மீதே ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினர்"

என்று தோழர் குருசெவ் கூறிவிட்டு, அய்யகோ யான் பொதுவுடமைப் பிரச்சாரம் செய்வதாக ஆகிவிடும், இத்துடன் இப்பேச்சை நிறுத்திக்கொள்கிறேன் என்ருராம்!

தோழர். குருசெவின் இந்த நையாண்டியானது, இன்று இந்திய துணைக்கண்டத்தின் ஆட்சி பீடத்தி லமர்ந்துள்ள வர்களுக்கு எவ்வளவு மறைமுகமான குட்டு! இதைக்கேட்ட நேரு பண்டிதரின் மனம் என்னபாடுபட்டிருக்குமோ அறியோம்!

அதுமட்டுமல்ல—தோழர் குருசெவ் அவர்களின் பேச்சிலே தொக்கி நிற்கும் முக்கிய கருத்து என்ன தெரியுமா—மிகப் பெரிய கட்டிடங்களை அன்று மன்னர்கள் கட்டினுர்கள், அதற்கு மக்கள் நன்றி செலுத்த வேண்டும்தான். ஆனல் அதே மன்னர்கள் மக்களின் உரிமையை மதிக்கவில்லையென்ருல் கட்டிடம் கட்டிவைத்தவர்க ளாயிற்றே என்பதற்காக அவர்களின் ஆணவத்தை சகித்துக் கொள்ள முடியாதென்பதே.

அதுபோலவே-சுயராஜ்யக் குடிஅரசை நிறுவ நாங்கள்தான் பாடுபட்டோம் என்று கூறிக்கொள்ளும் கட்சியினரின் கூற்றை மறுக்காமல் அப்படியே ஏற்றுக் கொள்வதாக வைத்துக்கொள்வோம்—அதற்காக அனைவரின் நன்றி அவர்களுக்கு உரித்தாக வேண்டியதேதான்! ஆனல் சுயராஜ்யக் குடியரசுஆட்சி, மக்களின் உரிமைகளை மதிக்காமலிருந்தால் அனுமதிக்க முடியுமா? எனவே அரசியல் ஆதிக்கம் தங்களிடம் சிக்கிவிட்டதென்ற காரணத்தால் தலைவிரித்தாடும் அநீதிகளை அகற்ற வேண்டிய அளவுக்கு இந்தியத்துணைக்கண்டத்திலுள்ள மக்கள் உணர்வுபெற வேண்டும்-

நக்கீரன்

ஏனெனில் அடிமைப் படுத்தப்பட்டிருந்த இம் மக்களின் மகத்தான சக்திதான் சுதந்திரத்தைத் தேடித்தந்தது—என்பதை நினைவில் வையுங்கள் என்று எச்சரிப்பதைப் போல பேசி யிருக்கிருர் குருசெவ்!

*

ருஷ்யப் பிரதமர் புல்கானின் குருசெவ் ஆகிய இருவருக்கும், டில்லி பல்கலைக் கழகத்தினர் 'கவுரவ பட்டம்' அளிக்க திட்டமிட்டிருந்தனர். ஆனல் இந்தப் பட்டத்தை ஏற்க அவர்கள் மறுத்து விட்டனர்! எங்கள் நாட்டில் பட்டத்தைப் பெறவேண்டுமானல் உழைத்துப் படித்துத்தான் ஆக வேண்டும். 'கவுரவப் பட்டம்' வழங்கும் வழக்கமோ அல்லது வாங்கும் பழக்கமோ எங்கள் நாட்டில் கிடையாது" என்று அவர்கள் கூறிவிட்டனராம்!

பரிதாபம்—பரிதாபம்—-டில்லி தேவதைகளின் முகத்தில் இப்படியா கரி பூசுவது புல்கானின்! வெள்ளையர் ஆண்டபோது அவர்களும், பட்டம் வழங்கி வந்ததை அனைவரும் அறிவர் அன்று அப்பட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களை தேசியத் தலைவர்கள் கடுமையாகத் தாக்கிப் பேசினர்!

இன்று—நேருபண்டிதர் ஆட்சியில் பட்டங்கள், வெள்ளையர் ஆட்சியிலிருந்ததைவிட வித விதமாகக் கிளம்புகின்றன! பாரத ரத்னம் முதல் சிரம பண்டிப் வரை! இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர்—ஒரு பாரதரத்தினம்! —அதுமட்டுமா வெளிநாடுகளுக்குச்சென்று வரும்போதெல்லாம், இரண்டு மூன்று டாக்டர் பட்டங்களைச் சுமந்துகொண்டு தான் டில்லி விமான நிலையத்தில் வந்திறங்குவார் நேரு!

சுயராஜ்ய குடிஅரசு ஆட்சியினரின் இந்தப் பட்டங்கள் நேரு பண்டிதரிலிருந்து கோகில கான தோழியர் எம்.எஸ்,சுப்புலட்சுமி வரை அலங்கரித்து வருகிறது!

வெள்ளையர் ஆட்சியில் ஆண்டுக்கு இருமுறை கவுரவப் பட்டங்கள் வழங்கும் சம்பிரதாய ஜபர்தஸ்து நடைபெற்றன, இந்த உத்தம புத்திராகள் ஆட்சியிலோ உம் என்ருல் ஒரு பட்டம், அம் என்ருல் மற்றொரு பட்டம் என்பதாக தலைவிரி கோலம் போட்டு வருகிறது!

சுருங்கக் கூறவேண்டுமானல் காய்ந்த மாடு கம்பத்தில் வீழ்ந்தது போல பட்டங்கள் படாதபாடு படுகின்றன நேரு பண்டிதரின் தர்பாரில்!

இதனை தி. மு, கழகம்போன்ற மாற்றுக் கட்சியினர் எடுத்துக் காட்டி அறிவுரை கூறினல், சீறி விழும் சுதந்திர வீரர்களுக்கு,

8-ம் பக்கம் பார்க்க

திராவிடப் பூங்கா

வந்தைவேள்

வாசபேய யாகம்!

தோழர் நேரு அவர்கள், உலகஞ் சுற்றினார்! ஏன்? உலகெங்கணும் மூலைக்கு மூலை பகை! போர் வெறி! அமளி! அத்தனையும் தலை விரித்தாடின! அவைகளைக்கண்டு புழுங்கினார், சாந்தமே உருவான புத்தர் பிறந்த நாடல்லவா நம் இந்திய உபகண்டம்? அதில் பிறந்த நேரு அவர்களுக்கும் அமைதியில் அக்கரை ஏற்படுவது பொருத்தந்தானே! பற்பல மேலை நாடுகளுக்கு நேரு ஒரு சமாதானத் தூதராகச் சென்று அமைதியை நில நாட்டப் பாடு பட்டார்!

அவரது நண்பர் தோழர். வி. கே. கே. மேனனும் அதே வேலையைச் செய்து நேருவுக்குப் புகழ் மேல் புகழ் அடுக்கித் தந்தார்—தருகிறார்.

ஐ. நா. சபை பாடுபடுவதும் உலக சமாதானத்துக்காகவே தான்! ஜெனீவாவில்கூடும்மாநாடுகளும். சமாதானத்தை வேண்டியேதான்.

அமைதி நாடுவோர் சங்கமேஉருவெடுத்து உலக சமாதானத்திற்காக கையெழுத்து வாங்குவதும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதுமாகவும் பணி புரிந்து வருகிறது.

மேற் கண்ட முயற்சிகளால் எல்லாம் சமாதானம் கிட்டவே கிட்டாது எனத் தீர்மானித்துத் "தெளிந்த" மதவாதிகள். ஒரு சரியான குறுக்குவழி கண்டார்கள்! அதுவே வாச பேய யாகம்!

யாகத்தால் ஆகாதது எது? மழை வேண்டுமா? யாகம்! பயிர்கள் செழிக்க வேண்டுமா? யாகம்! பிள்ளை பிறக்க வேண்டுமா? (புத்திர காமேஷ்டி) யாகம்!

உலக சமாதானம் தழைக்க வேண்டுமா? அது யாகத்தாலல்லாது வேறு எதனாலாகிலும் சாயாது!

சரி! பல இலட்ச ரூபாய் திரட்டு! நடத்து "வாச பேய யாகம்"!

அப்படியே, இம்மாத ஆரம்பத்தில் தொடர்ந்து ஏழு நாட்களாக பூனாவில், பம்பாய் கவர்னர், டாக்டர் ஹரிகிருஷ்ண மஹ்தாப் முன்னிலையிலும், உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், சென்னை-கவர்னர், ஸ்ரீ பிரகாசா ஆகியோர்களின் நல்லாசிச்செய்திகளுடன் நடந்தேறியது.

டாக்டர் எம். எஸ், ஆனே, முன்னாள் பீகார் கவர்னர் (உடல் நலம் இல்லை போதும்) தூக்குப் படுக்கையில் (Stretcher) படுத்தவாறே, "இந்த யாகம் ஒரு தனிப்பட்டவர் நன்மைக்காகவோ, அல்லது ஒரு குறிப்பிட்டச்சமயத்தார் நலங் கருதியோ நடக்கும் யாகமில்லை. உலகெங்கணும் பரவியுள்ள ஏனைய மக்கள் எல்லார் நலம் விழைந்தே, நடைபெறும் யாகம் இது. இதில் இந்துக்கள் அல்லாத பிற மதத்தினரும் பங்கு கொண்டு இதன் வெற்றிக்காக உழைத்தது குறிப்பிடத்தக்கது என மொழிந்து யாகத்தைத் துவக்கி வைத்தார்.

எப்படித் துவங்கியது வாசபேய யாகம்?

பலமுனைகளிலிருந்து பதினேழு வேத பண்டிதர்களை சல்லடை போட்டுத் தேடி வருவித்தார்கள்.

ஒரு தேரைக் கொணர்ந்து அதிலேயே தீ வளர்த்துத் தெருத் தெருவாக இழுத்துச் சென்று ஊர்வலம் வந்தார்கள், வேதியர்கள் வேத மோதினர்.

இப்படி ஆரம்பித்தது, ஏழு நாள் வரை தொடர்ந்து நடந்தது.

இந்த வாசபேய யாகத்தின் ஐதீகம் என்னையெனின், இவ் யாகத்தால், பிரஜாபதி என்ற ஒரு கடவுள் விண்ணினின்று, மண்ணிற் போந்து, இந்நில உலகுக்கு சமாதாத்தை வழங்கிவிட்டு மீள்வார்!—என்பதே.

பிரஜாபதி சும்மா வந்திறங்குவாரா?

பதினேழு திருமுகத் தோற்றமுடையவராம் அவர். அவருக்கும் உயிர்பலி ஏற்றலில் நீங்கா பற்று போலும்! முகத்திற்கு ஒன்றாக ஒரு பசு மாட்டையும், ஒரு வெள்ளாட்டையும், ஆக மொத்த 17 பசுக்களையும் 17 வெள்ளாடுகளையும் பலியாக்கித் தீர்த்தார்கள்!

ஆ! என்ன கொடுமை! என்னே மதியீனம்!

பசுவைத் தெய்வமாகக் கொண்டாடும் அதே பக்தர்கள் வறண்ட நெஞ்சங் கொண்டு 17 பசுக்களைக் கொன்றார்களென்றால் என்னே பேதமை! இத்தகு அதிசயப் பிறவிகள்தான் பசு வதை தடுப்பு மசோதா நிறைவேற்றக் குதிக்கிறார்கள்! மதத்தின் பெயரால் வெட்டி வீழ்த்தினால் "பசுவதை" அல்லவாமோ? அதைத் தடுப்பார் யாராம்? எம்மசோதாவாம்? அது நிற்க.

காந்தியாருக்கு பிரியமான வெள்ளாடுகளையும் பிரஜாபதிக் கடவுளைக் காட்டி, அவரது பதினேழு திருமுகத்திற்கு ஒன்றாக வெட்டி சாய்த்தார்கள் "ஜீவகாருண்ய சிகாமணிகள்!"!

இத்தகு உயிர்ப்பலிகளைத் தடுக்க மசோதா நிறைவேற்றுவது எப்போது? யாரால்?

வேதங்கள் ஓதி முடிந்த கடைசி ஏழாம் நாளன்று சாக்ஷாத் பிரஜாபதியே நேரில் வந்தார்! வந்தாரா? யார் கண்டார்கள்?—இவையெல்லாம் என்ன கேள்விகள்? மதம் என்றால், ஏன்? எங்கே? எதற்கு? எப்போது? என்ற கேள்விகள் கேட்பது பாபம்! வேதத் தலைகள் கூறுவதை அப்படியே நம்ப வேண்டும் அதுதான் மதம்!

வந்தார்! பாபங்களை எல்லாம் போக்கினார்! உடனே முழுக்கு போட வேண்டாமா?

'அவபிருதஸ் நாநம்"! அங்கே கூடியுள்ள மக்களனைவரும் அருகில் உள்ள முத்தாற்றில் மூழ்கிவிட்டு திரும்பிப் பாராமல் யாக சாலைக்கு வந்தார்கள்! எவ்வளவு பேர்! 3,000 பெண்கள் உட்பட 5,000 பேர்கள்! (யாகத்தை ஏழு நாட்களாகக் கண்டவர் தொகை இலட்சத்திற்கும் மேலாம்.)

முழுக்கு முடிந்துத் திரும்பியவர்களுக்கு எம். ஆர். ஜெயகார் (பூனா பல்கலைக்கழகத் துணைவேந்தர்) ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். அவர் வாசபேய யாக ஆலோசனைக் குழுவில் ஒரு முக்கியபுள்ளி! அவர் என்ன கூறினார்? இந்நாட்டிற்கு இன்று அவசியமாகத் தேவைப்படுவது வேத தர்மம்! இந்த வாசபேய யாகம், சுமார் இருநூறு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் நடைபெற்றது. அதன் பிறகு இப்போதுதான் புதுப்பிக்கப் படுகிறது. பூனா கலாசாலையிலும் வேத பாட போதனை துவக்கப் படல் வேண்டும். ஆனால் அறிஞர்களிடமிருந்து எதிர்ப்பு எழுகின்றன. காலாவதியான கபோதி நம்பிக்கைகளை மீண்டும் புதுப்பிக்கல் கூடாதென்கின்றனர். என்செய்வேன்?—என்று பேசியிருக்கிறார்.

மகாராஷ்டிர தேயம் மதத்தால் எவ்வளவு இன்னல்களுக்கு ஆளானது என்பது சிவாஜி மன்னனின் வீழ்ச்சியே போதுமான சான்றாகாதா? இன்னமுமா மதத்தைக் கட்டி யழுவது? மௌடீகத்தை வளர்ப்பது? இதற்குக் கற்றறிந்த அறிஞர்கள் உடன்படுவது பொருந்துமா? யாகம் என்ற பெயரால், வெட்டிக்கு, விரயமாக்கும் பணத்தைக் கொண்டு நாட்டை நலமுறச் செய்தல் கூடாதா? திருந்துவது தான் எப்போது? சிந்திக்க!

தென்பகுதி ரயில்வே மென் யூனியன்

கிளைகளின் கண்டனங்கள்.

செங்கற்பட்டு

இக்கிளையின் செயற்குழுக் கூட்டம் 16-11-55 அன்று சங்க அலுவலகத்தில், மாலை 3-மணிக்கு கூடிற்று, கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

மத்திய சங்கத் தலைவர் தோழர் இராகவானந்தம் அவர்கள் 31-10-55 அன்று வெளியிட்ட அறிக்கையின்படி பொதுச்செயலாளர் தோழர் வீராசாமி பி. ஏ. எம். பி. அவாகள் யூனியனிலிருந்து விலகல் குறித்தும், கூட்டுப் பொதுச்செயலாளர் தோழர் சச்சிதானந்தம் அவர்கள் சர்வாதிகார பாணியில் நடந்தமைக்காக, தக்கநடவடிக்கை எடுக்கவும், இக்கிளையில் 23-10-55 அன்று நிறைவேற்றப்பட்ட "கூட்டுப் பொதுச் செயலாளா தோழர். சச்சிதானந்தம் மீது நம்பிக்கை இல்லை" என்ற தீர்மானம் பற்றியும், முடிவு எடுக்க 4-12-55 அன்று விழுப்புரத்தில் மத்திய சங்க நிர்வாகக் குழுக்கூட்டம் கூடவிருக்கிறது. இது தெரிந்த கூட்டுப் பொதுச் செயலாளர் தான் செய்த குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, தான் முன்னதாக 21-11-55 அன்று, மண்டபம் ரயில் நிலையத்தில் மத்திய சங்க குழுக்கூட்டம் கூட்டுவதாக அறிக்கை விடுத்தது முறையல்ல என இக்கூட்டம் கருதுவதுடன், கூட்டுப் பொதுச்செயலாளர் மீது நம்பிக்கை யில்லையென்று இக்கிளையில் 23-10-55 அன்று தீர்மானம் நிறைவேறி யிருக்கும் போது, ஒழுங்கிற்கும், பண்புக்கும் மாறாக அவரே மத்திய சங்கக் கூட்டம் கூட்டுவதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் 21-11-55 அன்று நடக்க விருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல், 4-12-55 அன்று விழுப்புரத்தில் கூடும் மத்திய சங்க கூட்டத்திற்கு கலந்து கொள்வதென முடிவெடுக்கப்பட்டது. பின்னர் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

*

சேலம்

16—11—55ல் (சேலம்) கிளை பொருளாளர் தோழர் தங்கராசு அவர்கள் தலைமையில் கூடிய கமிட்டி கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

வருகிற 4—12—55 நிர்வாகக் குழு (CEC) கூட்டம் விழுப்புரத்தில் நடத்த மத்திய சங்கத் தலைவர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் எல்லாகிளைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியிருக்கும் போழுது, மத்தியசங்கத் தலைவர், பொதுச்செயலாளர் அனுமதியின்றி 21-11-55ல் மண்டபத்தில் கூட்டும் நிர்வாகக் குழு கூட்டத்தை நாங்கள் நிராகரிக்கிறோம். அது அதிகார பூர்வமானது அல்லாததால் அதில் எடுக்கப்படும் முடிவு எங்கள் கிளையை கட்டுப்படுத்தாது.

நிர்வாக கமிட்டி கூட்டத்தின் பொழுது மத்திய சங்கத் தலைவர், யூனியன் கொள்கைக்கு விரோதமாக நடந்துகொண்டதை காரண காரியங்களோடு விளக்கி அவர் மீது நம்பிக்கையின்மையை வலியுறுத்தாது, திரு. சச்சிதானந்தமும் சில மத்திய நிர்வாகிகளும் தான்தோன்றித் தனமாக பத்திரிகையில் அறிக்கை விட்டுவருவது, யூனியன் வளர்ச்சிக்கு பாதகமாக இருப்பதால் அதை வன்மையாக கண்டிக்கிறோம்.

21—11—55ல் மண்டபத்தில் நடக்க இருக்கும், நிர்வாககுழு கூட்டத்தில் சேலம் கிளைத்தலைவர் திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் கலந்து கொள்ளக் கூடாது என இக் கூட்டம் கேட்டு கொள்ளுகிறது, மீறி கலந்து கொண்டால் தோழர் பாலசுப்ரமணியம் தன்னிச்சையாக ஒரு சாதராண உறுப்பினர் என்ற முறையில் கலந்து கொள்ளுகிறாரே, தவிர கிளைத் தலைவர் என்ற முறையில் அல்ல என்று கருதுகிறது.

சிறுகதை

புதைந்த புதையல்!

நெல்லை பி. காசி விசுவலிங்கம்

புதையல் ஆம்...அங்கேதான். அந்த ஆலமரத்து வேருக்கு பத்தடி தள்ளி அந்த வேலமர ஓரமாக புளியமரம் வரை தோண்ட வேண்டும். நிச்சயமாக அங்குதான் இருக்க வேண்டும். வள்ளியூர் பண்ணையார் வள்ளிநாயகம், அவர் நண்பர் கோமதி நாயகமும் பேசிக் கொண்டனர்.

மறுநாள் இரவோடு இரவாக வேலை ஆரம்பமாகி விட்டது. ஊருக்கு வெளியே இரண்டரை மைல் தள்ளி பள்ளமாக இருந்த அந்த பொட்டைக் காட்டில் நடக்கும் இந்த புதையல் தோண்டும் விஷயம் வள்ளிநாயகத்திற்கும் கோமதிநாயகத்திற்கும் அவர்கள் நம்பிக்கை நிறைந்த வேலையாட்கள் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. பள்ளம் கொஞ்ச, கொஞ்சமாக ஆழமாகிக் கொண்டு வந்தது. பத்தடி பள்ளம். நல்ல வேளை தண்ணீர் வந்து தொல்லை ஒன்றும் தரவில்லை. அந்த பக்கங்களில் சாதாரணமாக எழுபது அடி தோண்டினால்தான் நீரையே பார்க்க முடியும்.

அன்று நிலவை கார்மேகம் மறைத்துக்கொண்டிருந்தது. மண்வெட்டிகளின் ஒலியும், குத்தூசிகளின் அழுத்தமான ஒலியும் அந்த இரவின் அமைதியில் மெல்ல எதிரொலித்துக்கொண்டிருந்தன. திடீரென வேலையாட்கள் துள்ளிக் குதித்தனர். அவர்களால் ஒன்றும் பேச முடியவில்லை வள்ளிநாயகமும் கோமதிநாயகமும் நெஞ்சு படபடக்க வேலையாள் கந்தனை உலுப்பி 'என்ன' வெனக் கேட்டனர். அவன் பள்ளத்தில் எதையோ சுட்டிக் காண்பித்தான். கார்மேகத்தினின்று விடுபட்ட நிலவொளி பள்ளத்தில் வெட்டுப் பட்டு நெளிந்து துடித்துக் கொண்டிருந்த பெரிய பாம்பின் மீது விழுந்தது. அனைவரும் சலித்துக் கொண்டனர். மீண்டும் வேலை நடந்து கொண்டே இருந்தது.

ஐந்துநாட்கள் போனதே தெரியவில்லை. 6-வது நாள், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணம் என்பதற்கு பதிலாக இரவொரு வண்ணமாக முப்பதடி பள்ளம் தோண்டியாகி விட்டது. வேலையாட்களின் சம்மட்டிகள் கெட்டியான செங்கல்லில் மோதின. இருந்தவர் விழிகளிளெல்லாம் பொங்கி விழிந்த மகிழ்வை அந்த பூரண நிலவு எடுத்துக் காட்டியது.

வேலையாட்கள் மண்வெட்டிகளையும் குத்தூசிகளையும் எறிந்து விட்டு கையால் அந்த செங்கல்களை பெயர்த்து எறிந்த வண்ணமிருந்தனர். வள்ளிநாயகத்தின் கையில் கட்டியிருந்த பெரிய காலங்காட்டி, மூன்றென அறிவித்த வண்ணமிருந்தது. பல இரவுகள் விழித்த அவர்கள் கண்கள், சிவந்திருந்தன. நிலவு தன்னொளியைச் சற்றும் குறைக்காது வீசிக்கொண்டிருந்தது. இதுவரை இருவர் முகத்திலும் அகத்திலும் ஏற்படாத ஒரு மாற்றம்...இருவரும் ஒருவரை ஒருவர் விகாரமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டனர். அந்தவிழிகளில் தொனித்த குணங்களைக் காணாது வேலையாட்கள் வேலை செய்து கொண்டிருந்தனர். ஒரே ஒருவன் மட்டும்,— வள்ளிநாயகத்தின் வேலையாளான பிச்சையா மட்டும் அடிக்கடி அவர்களை கவனித்த வண்ணம் வேகமாக செங்கற்களை வெளியேற்றிக் கொண்டிருந்தான். அவனால் நிலவொளியை முதுகில்பட நிற்கும் அவர் முக மாறுதல்களை கவனிக்க முடியவில்லை. நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

''ஏல, ஏ பிச்சையா, இந்தா கருப்பா...ம். வானம் வெளுக்கிருப்புல இருக்கு...போங்கடா, போங்க, நாளைக்கு டார்த்துக்கலாம்! வள்ளிநாயகம் தன் கரகரப்பான அடித் தொண்டையில் சொல்லிவிட்டு கோமதிநாயகத்தைப் பார்த்து ஒரு வரட்டு சிரிப்பு சிரித்தார். ஏழு உருவங்கள் பள்ளத்தினின்று வெளி வந்தன. ''சாமி...வரட்டுங்களா'' ஒரே ஒரு உருவம் மட்டும்...அந்த புளியமரத்து அருகில் நின்று மறைந்து கொண்டதை யாரும் அறியவில்லை. பல நாட்கள் இரவு கண் விழித்து தாமாக மூடிக் கொள்ள முயன்ற எரிந்துகொண்டிருந்த அவர்கள் விழிகள் கவனிக்கவில்லை.

வள்ளிநாயகம் கோமதிநாயகத்தைப் பார்த்தார்—கோமதிநாயகம் வள்ளிநாயகத்தைப் பார்த்தார். சற்று அமைதி...தூரத்தில் நடந்து கொண்டிருந்த அந்த வேலையாட்களின் உருவங்கள் கருநாகன் பள்ளத்தில் இறங்கி வேலியூரின் இடிந்துபோன குடிசைகளைக் கடந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'என்ன அண்ணாச்சி' என்றார் கோமதிநாயகம்.

'ம். என்னங்க, அண்ணாச்சி... இறங்கிப் பாப்பமா'

'ம்'

இருவரும் பள்ளத்தில் மெல்ல இறங்கினர். புளிய மரத்திற்கு பின்பு நின்ற உருவமும் அவர்களை மெல்ல பின் தொடர்ந்தது. இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டே மெல்ல இறங்கினர்.

'அண்ணாக்சி பார்த்தியா' என ஒரு செங்கல்லை கையில் எடுத்துக் கொண்டு கீழே குறிப்பிட்டுக் காட்டினார் கோமதிநாயகம், வள்ளிநாயகம் ஆவலோடு கீழே குனிந்தார். கோமதிநாயகத்தின் கையிலிருந்த செங்கல் வள்ளிநாயகத்தின் தலையில்விழவும். ஒளிந்து கால்களால் ஊர்ந்துவந்துகொண்டிருந்த அந்த உருவம்—ஆம் பிச்சையாதான் அந்த உருவம். குழியின் அருகில் இருந்த மண் சரிய அவன் உள்ளே விழுந்தான். வள்ளிநாயகத்தை சரிந்த அந்த மண்ணும் கல்லும் மூடிவிட்டது. பிச்சையாவும் கோமதிநாயகமும் பயத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பிச்சையா பயந்து போய் ஓட கோமதிநாயகம் ஏதோ நினைத்தவராக வெறிவந்தவர் போல் அவனைத் தொடர்ந்து ஓடினார். பிச்சையா கண் மண் தெரியாமல் ஓடினான். கோமதி நாயகத்தால் அவனைத் தொடர்ந்து ஓடமுடியவில்லை. நின்று...மூச்சுவாங்க அப்படியே உட்கார்ந்து விட்டார். கோமதி நாயகத்திற்கு ஒரே கலக்கம், ஓடிவந்த அயர்வு தந்த மயக்கம். புதையல் எடுக்கப்போய் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அவர் விழித்திரையில் மீண்டும் நிகழ்வது போன்ற உணர்வு.

பொன்னும், மணியும், முத்தும், வெள்ளியும் அவர் மனத்திரையிலே ஒளி வீசின... தங்கக் கட்டிகள், வெள்ளிச் சுமை குவியல் குவியலாக வைரங்கள்... கோமதி நாயகத்தின் வீடெல்லாம் பொன்னொளி வீசுகிறது. தரையில் கூட வைரங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. வெந்நீர் அண்டா முதல் வாளி வரை வெள்ளி... சிந்தனை சுழன்றது... போலிஸ்காரர்கள் அவரைப்பிடித்து கைவிலங்கிட்டு நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லுன்கிறனர். ஒரே கூட்டம் ...கோமதி நாயகத்திற்கு மரண தண்டனை...ம்... வள்ளி நாயகத்தின் பேய்...அவரை நோக்கி வருகிறது. அப்ப...என்ன கோரமான சிரிப்பு... தங்கக்கட்டிகள், வெள்ளிப்பாறைகள்...முத்து, கௌமேதகம்...வைரம், வைடூரியம் அத்துணையும் வெளியே பறக்கின்றன ...வீடு இடிந்து விழுகிறது. அவர் மனைவி வடிவும், மகன் சுந்தரமும் தெருவில் பிச்சை எடுக்கிறார்கள் ...பசி...பசி...சுந்தரம் கதறுகிறான் யாரோ ஒருவன் வடிவுக்கு காசைக்காட்டி 'எதற்கோ' கூப்பிடுகிறான். வடிவு மறுக்கிறாள். சுந்தரம் அழுகிறான், வடிவும் அவனும்...!...!

கோமதி நாயகத்தின் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது. விடிவெள்ளியின் ஒளி மங்கிக் கொண்டிருந்தது. பொழுது மெல்ல புலர்ந்துகொண்டிருந்தது. தூரத்தில் அதிகாலையில் உழவர்கள் கலப்பையைத் தோளில் போட்டுக் கொண்டு மாட்டை விரட்டிச் செல்வது அவர் கண்களுக்குப் பக்கமாக வந்து ஓடியது கார்த்திகை மாதத்து குளிர் வாடை அவர் கால்கைகளை யெல்லாம் மரம்போல் விரைக்க வைத்திருந்தது. பித்து பிடித்தவர் போல் அங்கேயே உட்கார்ந்திருந்தார்.

போலீஸ்காரர் இருவர் அவர் தோளைத் தட்டிய போதுதான் அவர் தன்னுணர்வுக்கு வந்தார். போலீஸ்காரர் அருகில் பிச்சையாவும் நின்றான். கோமதிநாயகத்தின்நாவசைய மறுத்து. ஒன்றும் பேசாமல் அவர்களுடன் போலீஸ், ஸ்டேஷனுக்கு நடந்தார். வடிவு அவள்தான் அவர் பத்தினி. சுந்தரத்தைஇடுப்பில்வைத்தவண்ணம் கணவனுடன் போலீஸார் வருவதை எண்ணி பதறிப்போய் நின்றாள். போலீஸ்கரர்கள் அவரை அழைத்துச் சென்றனர். பொங்கி வந்த அழுகை புலம்பலாக, அவள் காந்திமதி அம்மன் படத்திற்கு முன்பு சென்று தலைவிரி கோலமாக விழுந்து அலறினாள்.

அன்று சில மணி நேரத்திற்குள், அந்த புதையல் தோண்டிய இடத்தில் கூட்டம் பெருகி விட்டது. கூட்டத்தை போலீஸார் சமாளித்தவண்ண மிருந்தனர். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஜீப்பில் வந்து இறங்கினார். மெல்ல வள்ளிநாயகம் பிள்ளையின் பிணம் வெளியே எடுக்கப் பட்டது. வள்ளிநாயகத்தின் பிணம்பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. கொடுமைப் படுத்தப்பட்ட—அவரால் வாழ்விழந்த சில தாழ்த்தப் பட்டவர்கள் கூட பரிதாபப் பட்டுக் கொண்டிருந்தனர், நொறுங்கிப்போய் ரத்தம் வழிந்து கட்டிப்போய் மண் ஒட்டி இருந்தது. அவர் தலை, மூக்கெல்லாம் ஒரே ரத்தம். பிண வாடை. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஏதோ குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தார். வள்ளிநாயகத்தின் மனைவி பொன்னம்மா தலையில்கைவைத்த வண்ணம் உட்கார்ந்து விட்டாள். பிணம் பரிசோதனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வள்ளிநாயகத்தின் உற்றார் உறவினரின் உண்மையானதும், பொய்யானதுமான கதறல்களுக்கு நடுவே அதை எடுத்துக் சென்றனர்.

போலிஸார் அந்த இடத்தை மாற்றி மாற்றி துப்பாக்கியும் கையுமாக காவல்புரிந்த வண்ணம் நின்றனர். அங்கு ஒரு துணிக் கூடாரம் அடிக்கப்பட்டது. இரண்டுநாள் கழிந்தது. யாரோ சில புதிய பெரிய மனிதர்கள் அங்கு வந்தனர். போலீஸார் அவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

வில்லியம் பீளேக்கும், சோம நாதரும், கதிர்வேலப்பரும் கீழே குனிந்து அதை கவனித்த வண்ணமிருந்தனர். வில்லியம் புகைகுடித்துக்கொண்டே சோம நாதரிடம் பேசிக் கொண்டிருந்தார். மூவரும் புதைபொருள் ஆராய்ச்சிக் குழுவை சேர்ந்தவர்கள். மூவரும் ஒரு காரில் ஏறி கோமதிநாயகம் வைக்கப்பட்டிருந்த சிறைக்கு சென்று அவரிடம் பேசினர். கோமதி நாயகம் குழம்பிப்போன நிலையில் சித்தம் கலங்கியவராக புதையல்...பிச்சையா—வள்ளி அண்ணாச்சி... இந்த மூன்று வார்த்தைகளைத் தவிர ஒன்றுமே பேசவில்லை. பிச்சையா தனக்கு தோண்டியது மட்டும் தான் தெரியும் எனச் சொன்னான்.

(அடுத்த வாரம் முடிவுறும்)

திரு. வி. க. மன்றம்

சென்னை 19-வது வட்டத்திலுள்ள மேற்படி மன்றத்தினர், பேராசிரியர் இருதயராஜ் அவர்களின் மறைவு குறித்து அன்னாரைப் பிரிந்து வாடும் பேராசிரியரின் குடும்பத்தாருக்கு தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர் என்று செயலாளர் க. வரதன் அறிவிக்கிறார்.

மார்க்ஸீயமும் - திரு. வி. க. வும்!

அவர் தரும் அமிழ்த வாக்கு.

●

மார்க்ஸியம் நல்லதே: கெட்டதன்று. காரல் மார்க்ஸ் இந்திய மண்ணில் தோன்றி இந்திய நீரருந்தி, இந்தியக் காற்றில் உலவி, இந்திய ஒளியில் மூழ்கி, இந்தியக்கல்வி பயின்று, நூல்கள் எழுதியிருப்பரேல், அவர் தம் நூல்கள் இன்னும் மணம் பெற்றிருக்குமே,

ஃ

மார்க்ஸியம்—அஃது உள்ளவாறே எந்நாட்டிலும் வளராது. அஃது அவ்வந் நாட்டு இயற்கை வளத்துக்கேற்ற முறையிலேயே வளர்ந்து வரும்.

ஃ

மார்க்ஸியம் ஒருவித தத்துவம். அது நடைமுறையில் அதன் தத்துவப்படியே வளராது; நாடுகளின் இயற்கை நோக்குக்கும் போக்குக்கும் ஏற்ற முறையிலேயே வளர்வதாகும்......அதை உள்ளவாறே ஏற்க இந்தியாவின் இயற்கை இடந்தராது.

ஃ

சட்டம் தானே இயங்குமோ? அதை இயக்குவோர் மனிதரே. மனிதரால் சட்டம் நன்முறையில் இயக்கப்படுவதும் உண்டு; தீய முறையில் இயக்கப் படுவதும் உண்டு. சட்டத்தின் நலனும் தீமையும் அதைச் செலுத்தும் மனிதரையே பொறுத்து நிற்கின்றன. குணம் சட்டத்தினின்றும் பிறப்பதன்று; மனிதரிடத்தினின்றும் பிறப்பது. நற்குணம் பிறப்பதற்குரிய கல்வி,அரசு,வாழ்க்கை முதலியன வேண்டும்.

ஃ

சிப்பாய் கலகம் ஓர் ஆவேச மறக் கிளர்ச்சி. அது நாட்டின் விடுதலையைக் குறிக்கொண்ட அறக் கிளர்ச்சியாகாது. ஆகவே, அதை விடுதலைக் கிளர்ச்சியில் சேர்த்துச் சொல்வது பொருத்தமன்று.

ஃ

கடவுள் படைப்புக் குட்பட்ட பொருளெல்லாம் மக்களுக்குப் பொதுவாகப் பயன் படல் வேண்டும்.

ஃ

எதையும் ஆராய்ந்து பார்க்கும் உரிமை மன்பதைக் கிருத்தல் வேண்டும். அவ்வுரிமை யற்ற இடம் நாகரிகம் செறிந்ததாகாது.

ஃ

எப்புதுமையும் ஒரு பழமையினின்றும் பிறப்பதேயாகும். பழஞ் சிறப்பு உணர்ந்து புத்துணர்ச்சி பெற வேண்டுவது இளைஞர் கடமை.

ஃ

'ஒருவர் துன்பம் மற்றவருக்குத் தோன்றுதல் வேண்டும். இவ்வியல்புடைய நாடே உயிருடையதாகும். மற்றையது காடு; சுடுகாடு.

ஃ

கலப்புமணத்தால் சாதி மதப் புன்மை பொன்றுவது திண்ணம், ஒற்றுமைக்குரிய கலப்பு மணத்தை அக்பர் தாமே செய்துகாட்டினர். கலப்பு மணம் அந் நாளில் காட்டுத் தீப்போல் நாட்டிடைப் பரவியிருந்தால் இந்தியா அடிமை நாடாகி யிராது. ஹிந்துக்களின் சாதிக் கட்டும், சம்பிரதாயக் கட்டும், பிற கட்டுகளும் கலப்பு மணத்தைப் பெருகவிடவில்லை, ஒற்றுமைக் குரிய நல்ல நல்ல வாய்ப்புகளை யெல்லாம் இந்தியா நெகிழவிட்டது.

ஃ

ஆசையோ ஆவேசமோ எழும்பும்போது சிலர் அதற்கு எளிதில் இரையாகித் தாம் இன்னது செய்வதென்று உணராமலே என்னென்னவோ செய்வர். அஃதடங்கிய பின்னைத் தஞ்செயல் மீது சிந்தனை செலுத்துவோருமுளர், சிந்தனை செலுத்தாது கிடப்போருமுளர்; சிந்தனை செலுத்துமளவில் நிற்பவருமிருப்பர்; சிந்தனை செலுத்தித் தஞ்செயல் தகாது என்று உணர்ந்ததும் வருந்தி வருந்திக் கதறுவோரு மிருப்பர். வருந்துவோர் கரையேறுதற்கு வழி காணும் பேறு பெறுவர்.

ஃ

கருத்து வேற்றுமை மக்களிடத் தெழுவது இயற்கை. அவ் வேற்றுமை எழுதற்கென்றே மக்கட் பிறவியில் பகுத்தறிவு அமைந்திருக்கிறது. அவ் வேற்றுமை எழாத கூட்டம் விலங்கினமாகும் கருத்து வேற்றுமை எழ எழ அறிவு சிறைப்படாது, தெளிவடைந்து கொண்டே போகும். ஆதலின், அதற்கு மதிப்பளித்தல் நாகரிகமென்க.

ஃ

நாட்டு வளர்ச்சிக்குக் கருத்து வேற்றுமை இன்றியமையாதது. கருத்து வேற்றுமைக்கு இடந் தராத நாடு வளர்ச்சியுறாது சிறைப்பட்டுச் சாம்பும். கருத்து வேற்றுமையைக் காயாது, கடியாது, அதற்கு இடந் தருவது வளர்ச்சியை நாடுவதாகும்.

ஃ

கருத்து வேற்றுமை வளர நன்னெறிகள் தழைக்கும். கருத்து வேற்றுமை காரணமகக ஒருவரை ஒருவர் பகைத்தல் அறியாமை; இழிவு; நீசம்; சண்டாளம். கருத்து வேற்றுமைகு இடந் தருவது சமதர்ம வளர்ச்சிக்கு இடந் தருவதாகும். —திரட்டு: டபிள்யூ.

திரு. வி. க. படத்திற்கு தடையில்லை

தமிழ்ப் பெரியார் திரு வி. கலியாண சுந்தரனர் படத்தை அரசாங்க நிர்வாகத்திற்குட் பட்ட பள்ளிகளில் வைக்கக் கூடாதென்று ஒரு அரசாங்க உத்தரவு இருப்பதாக செய்தி வந்ததையொட்டி, அதுபோன்ற அரசாங்க உத்தரவு அமுலிலுள்ளதா-வென விளக்கங் கேட்டு ஆம்பூர் திருவள்ளுவர்-கழகச் செயலாளர் எழுதிய கடிதத்திற்கு அரசினர் அனுப்பியுள்ள பதிலில் "திரு. வி. க." படத்தை பள்ளிகளில் வைக்கக் கூடாதென்ற அரசாங்கஉத்தரவு எதுவுமில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. என மேற்படி கழகசெயலாளர் அறிவிக்கிறார்.

நன்றியறிவிப்பு

7—11—55 திங்கள் காலை 11 மணிக்கு புதுவை. தென்னண்டை புல்வார், 9.ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெற்ற எங்கள் திருமணத்திற்கு நேரில் கலந்து கொண்ட தோழர்களுக்கும் நண்பர்களுக்கும். வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எஸ். அஜிஸ்—கைருன்னிசா
கடலூர் ஓ. டி.

'தேன்மொழி'

இம்மொழி கல்தோன்றி, மண் தோன்றாக் காலத்திலே இயற்கையோ டமைந்து எழுந்தது. இதயத்திற்கு இனிமை யளித்தது. மலர்ந்த மல்லிகை போல் எங்கும் மணம் வீசியது. அந்த நறு மணத்திலே உருக்கொண்ட எண்ணற்ற காட்சிகளையும், காட்சியைத் தழுவிய பண்புகளையும் கண்டான். கண்டது மட்டுமல்ல—எண்ணற்ற காவியங்களையும் எழுப்பினன்! உலகம் போற்றிப் புகழக் கூடிய 'திருக்குறளையும்' எழுப்பினன். அந்தக் குறளிலே பகுத்தறிவுப் பாசறையும் கண்டான்; பகுத்தறிவுப் பாசறையில் வீரர்கள் செயலாற்றும் முறையும் கண்டான் அன்று.

அன்று கண்ட 'தேன்மொழி'யை இன்று காண முடிவதில்லை, அவளுடைய உடம்பெல்லாம் துகள் துகளாகச் சிதைக்கப்பட்டு, மாற்று உருவிலே உலாவுகிறாள். அவள் இருந்த பாசறையில் வேண்டப்படாத — என்றென்றும் வெறுக்கக் கூடிய பிற மொழியாள் கலந்து விட்டாள். கன்னித் தமிழ் மொழியாள்; தித்திக்கும் தேன்மொழியாள் எங்கே? பிறமொழியாள் வடமொழி எங்கே? தேன்மொழியில் உலாவ வேண்டிய நாம் பிறமொழியிலேயே கலந்து உலாவுகிறோம். உண்மையிலே தமிழிலே—தேன்மொழியிலே வார்த்தைகளை பேசுகிறோமா? என்று எண்ணிப் பார்ப்போமானால்; அந்த தேன்மொழியைக் காண முடிவதில்லை. ஏன்? இந்த இழிவு நிலை.

தமிழன் நல்லுலகத்திலே தித்திக்கும் தேன் மொழியை பரப்பினன். இன்று அவன் வாயிலிருந்து வெளிவருவதும், எழுதுவதும் நூற்றுக்கு எண்பது வடமொழி. அந்தோ! கடைத்தெருவிற்குச் செல்வோமானல், தமிழ் மொழியிலே பெயர்கள் காணப்படுவதில்லை. தப்பித் தவறித் 'தமிழர் உணவு விடுதி' என்றோ, தமிழர் சிற்றுண்டி நிலையம் என்றோ இருந்தால், அங்கே தமிழன் அதிகம் போவதுமில்லை. அதன் எதிரிலே நித்தியானந்த விலாஸ் பிராமணாள் காபி ஓட்டல் என்று இருக்குமானல் அங்கே நுழைந்து உண்ண முற்படுவான். தமிழன் இனஉறவு காணப்படுவதில்லை. தமிழன் தமிழிலேயே பெயரிட்டுக் கொண்டால் ஏளனம் செய்ய முற்படுவான். மொழியைப்பற்றி சிந்திப்பதில்லை. மொழி வளர்ந்தால் தானும் வளரலாம் என்று எண்ணுவதில்லை,

"இம் மொழியில் (தமிழ் மொழி) எம்மொழி
[வந்து கலப்பினும்
யாம் என்றும், எதுவும் யறியோம் பராபரமே"

என வாழ்கின்றனர். அதனுல் புரட்சிக் கவிஞர்.

"தமிழகத்தின் தமிழ் தெருவில் தமிழ்தானில்லை"

என மனம் நொந்து பாடினர்.

தமிழா! உலகம் முன்னேறுகிறது. நீயும் முன்னேற வேண்டும். என்றும் பிறருக்கும், பிற மொழிக்கும் அடிமையாகாதே! உன் முன்னோர்கள், இலங்கையிலிருந்து இமயவரை தமிழ் முரசு கொட்டினவர்கள் அவர்கள் வழிவந்த நீயா! தாழ்ந்து விட்டாய். உன் தாயகத்திலே பிற மொழிக்கு ஆதிக்கமாம்! என்ன விந்தை!! ருஷிய நாட்டிலிருந்து வருகின்ற முதலமைச்சர் புல்கானினுக்கு தமிழ் மொழியில் தமிழ் நாட்டில் வரவேற்புக் கூடாதாம். உன் மொழி சிதைக்கப் படுவதைக்கண்டு, கிஞ்சித்தும் கலங்காமல் இருக்கிறாயே! உன் மொழி சிதைந்து போனல்; உன் கலை, வாழ்வு, வாணிபம், வளம் எல்லாம் சிதைவு ஏற்படும். என்று எண்ணிப்பார். அதனுலேயே, அறிஞர்கள்; கலைஞர்கள் மொழியைக்காக்க போராடுகிறார்கள். பிற நாட்டைப்போல், பிற மொழியைப்போல் உலக வரலாற்றிலே மிளிர்ந்து காணப்படவேண்டும். தேன் மொழியைப்போற்றி கவியரசர் பாரதிதாசன் கூறியதுப்போல்,

" தனிமைச் சுவையுள்ள சொல்லை-எங்கள் தமிழினும்
வேறெங்கும் யாங் கண்டதில்லை, "
" தமிழென்று தோள்தட்டி ஆடு-நல்ல தமிழ்வெல்க
வெல்க என்றே தினம் பாடு "
" தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர் "
" தமிழும் நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்
என்றும்-இனிமை காண விரைவில் எழுவீர்!
எழுவீர்!!

●

—ஆர். வி. பி. கரிகாலன்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

- வணக்கம், நவம்பர் திங்கள் முடிய நிலுவைத் தொகை பட்டியல் அனுப்பப் பட்டிருக்கிறது. விவரம் அறிந்து உடனே அனுப்பவைக்க வேண்டுகிறோம்.
- பொங்கல் மலர்—தேவைப்படும் எண்ணிக்கையின் விவரமும், முன் பணமும் டிசம்பர் திங்கள் முதல் வாரத்திற்குள் தவறாது அனுப்பிவைத்து விடுமாறு தெரிவித்துக் கோள்கிறோம்.

சந்தா தாரர்களுக்கு

வணக்கம், பொங்கல் மலர் தேவைப்படும் சந்தாதாரர்கள் தனியாக ரூபாய் ஒன்று அனுப்பினால் தான் மலர் அனுப்பி வைக்கப்படும், எனவே வழக்கம்போல சந்தா தாரர்கள் உடன் ரூபாய் ஒன்று அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இதன் மூலம் நினைவூட்டுகிறோம்.

—நிர்வாகி—திராவிடன்

திராவிடன்

சென்னை : 25—11—55 : வெள்ளி

மாணவர் அணிவகுப்பு

★

திராவிட மாணவ முன்னேற்றக் கழக இரண்டாவது மாநில மாநாடு, இத்திங்கள் 19-ம் நாள் சென்னையில் சீறும் சிறப்புடன் நடந்தேறி யிருக்கிறது. சென்னை நகரிலிருந்தும் பல மாவட்டங்களிலிருந்தும் மாணவப் பிரதிநிதிகள் ஏராளமாகக் கலந்து கொண்டு, தி. மா. மு. கழகத்தின் எதிர்கால ஆக்கவேலை குறித்து தங்கள், தங்கள் கருத்துக்களையும் தெரிவித்திருக்கின்றனர்.

தி. மா. மு. கழகம், கடந்த ஆண்டுகளில் மாணவர் இயக்கத் தலைவர் தோழர் கே. எ. மதியழகன் அவர்களின் தலைமையில் ஆற்றியுள்ள பணி, உண்மையிலேயே மகத்தானதாகும். பொதுவாக அனைவரும் பாராட்டத்தக்கதுமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டத்திற்கேற்ப, திராவிட மாணவ முன்னேற்றக் கழகம் அரசியல் கிளர்ச்சிகளில் நேரிடையான தொடர்பு கொள்ளா விட்டாலும், கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக தி. மு. கழகம் ஆற்றிவரும் பணிக்கு, தனது சக்திக்கு மீறிய ஒத்துழைப்பையும், உதவியையும் செய்து வந்துள்ளதை யாரும் மறக்க முடியாது.

இன்னும் சற்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமானால், வடநாட்டில் உள்ளதைப் போலல்லாமல், தென்னாட்டில் மாணவர்கள், தங்களின் கடமைகளில் கண்ணியம், கட்டுப்பாடு, கடமை உணர்ச்சி கொண்டிருந்து வருவதற்கு முக்கிய காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் காட்டும் பாதையைப் பின்பற்றிச் செல்லும் தி. மா. மு. கழகத்தின் தொண்டே யெனலாம்.

இவ்வளவு பொறுப்புடன் தி. மா. மு. கழகத்தை நடத்திச் சென்ற அதன் பொதுச்செயலாளர் கே. எ. மதியழகன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால பணிக்கு முழுதும் தேவைப்படுவதால், அவர் பொதுச்செயலாளர் பொறுப்பினின்றும் விலகிக் கொள்வதற்காக அனுமதி கேட்டபோது அம்மாநாட்டில் கலந்து கொண்ட மாணவத் தோழர்கள் அதற்கு மனமார ஒப்புதல் அளிக்காமல், தோழர் மதியழகன் அவர்களின் வற்புறுத்தலுக்காகவே அவரின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டார்களென்றால் மாணவர் கழகத்தின் வளர்ச்சியில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் கடமை உணர்ச்சியும் எத்தகையது என்பதை நாம் மேலும் விவரிக்கத் தேவையில்லை யென்று கருதுகிறோம்.

அன்று—அம்மாநாட்டில் புதிய பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் வரையில், ஆங்காங்கு தி, மா. மு. க. கிளைகளை அமைக்கவும், ஏற்கனவே இருக்கும் கிளைகள் தொடர்ந்து மேலும் பொலிவுடன் இயங்கவும் எல்லா மாவட்டங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

இக்குழுவினர், அவசியம் நேரும்போது, தி. மா. மு. கழக முன்னாள் பொதுச்செயலாளர் தோழர் மதியழகன் அவர்களின் அனுபவமிக்க ஆலோசனையைக் கேட்டுத் தங்களின் கடமையை இனிது நிறைவேற்றுவார்களென்று பெரிதும் நம்புகிறோம்.

இவ்வழியில் நின்று பணியாற்றும் தி. மா. மு. கழகத்தின் ஆக்கவேலைக்கு அறிஞர் அண்ணா அவர்களுடையவும், தி. மு. கழகப் பொதுச் செயலாளருடையவும், சிறந்த வழிகாட்டுந் தன்மை பெருந் துணையாக இருந்துவரும் என்பதில் ஐயமில்லை.

நமது அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டி வருவதைப் போலவும், மாநாட்டைத் துவக்கி வைத்த தி. மு. கழகப் பொதுச்செயலாளர் நினைவூட்டியதற் கேற்பவும் தி. மா. மு. கழகத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு மாணவர்களும் தங்களின் கல்வித் துறையில் கண்ணுங் கருத்துமாக யிருந்து—சுதந்திர திராவிடத்தை இனிதே இயங்கச் செய்யும் ஆற்றல் மிக்கவர்களாகத் திகழ வேண்டும் என்பதை நாமும் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

"மாணவர்களுக்கும்—அரசியலுக்கும் சம்பந்தமே கூடாது என்று வரட்டுக் கூச்சல் போடும் சில அரசியல் வாதிகளின் கூற்றை தி. மு. கழகம் ஏற்றுக் கொள்ள முடியாது. மாணவர்கள் நாட்டின் அரசியல்நிலை குறித்து நன்கு உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் அதன் கிளர்ச்சிகளில் ஈடுபட்டு, தங்களின் கல்வி வளர்ச்சியையும், ஒழுங்கு முறையையும் பாழ்படுத்திக் கொள்ளுதல் கூடாது. தாங்கள் கற்றுணர்ந்துவரும் கருத்துக்களை அரசியல் துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு வழங்கலாம்; அரசியல் துறையில் தி. மு. கழகம் வெற்றி யுறுவதற்குத் துணையாக சமுதாயத் துறையில் உள்ள கேடுகளை அகற்றும் வகையில், மாணவர்கள் அறிவு வளர்ச்சிப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்பதே தி. மு. கழகத்தின் கொள்கையாகும்"

என்று மாநாட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியுள்ள எடுத்துக் காட்டினை தி. மா. மு. கழகத் தோழர்கள் மட்டுமல்லாமல் மற்ற கட்சியினரும் கருத்தில் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்,

நிற்க, தி. மா. மு. கழக இரண்டாவது மாநில மாநாடு, மிக மிகக் குறுகிய நாட்களிலேயே நடைபெற்றிருப்பினும், மாநாட்டினை வெற்றிகரமாகவும் பயனுள்ளதாகவும் நடத்தித்தந்த வரவேற்புக் குழுவினரையும், இதுவரை தி. மா. மு. கழகப் பொதுச் செயலாளரா யிருந்து பணியாற்றிய நமது அருமைத் தோழர் மதியழகன் அவர்களையும், தி. மா. மு. கழகத்தினரையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

மற்றும், மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களில் முக்கியமாக—இந்தித் திணிப்பு—சென்னை ராஜ்யம், தமிழகம் என அழைக்கப்பட வேண்டியது—தேவிகுளம், பீர்மேடு, சித்தூர் நெய்யாற்றின்கரை ஆகிய பகுதிகள் தமிழகத்துடன் சேர வேண்டுவது—திராவிட நாட்டுத்தனிஅரசு அமைவதற்கு இந்தியப் பேரரசு உடனடியாக செயலில் இறங்க வேண்டுவது—என்ற முடிவுகளை அரசியலார் சற்று விவேகத்துடன் கவனித்து ஆவன செய்யவேண்டியது அவர்களின் முக்கிய கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகிறோம்,

வாழ்க, தி. மா. மு. கழகம் வளர்க, அதனின் நற்பணி.

வெல்க, தி. மா. மு. கழகத்தின் கொள்கைகள்.

●

பொன்னாடை போர்த்தினராம்!

கலைவாணர் என், எஸ், கிருஷ்ணன் அவர்களுக்கு 20—11—55 அன்று சென்னை நகரில் தமிழ் நாட்டு நடிகர் சங்கத்தினரால் பொன்னாடை போர்த்தும் நிகழ்ச்சி நடந்தேறியிருக்கிறது. இவ் விழாவில் நாடகத்துறையின் தந்தை என போற்றப்படும் உயர். திரு. (ராவ்சாகிப்) பம்மல் சம்பந்தம் (முதலியார்) அவர்களிலிருந்து மற்றுமுள்ள எல்லா நடிகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கின்றனர். இவ் விழாவினை நடத்தி, கலைவாணரைச் சிறப்பித்த நடிகர் சங்கத்தினரை நாம் பாராட்டுகிறோ மெனினும், அவ்விழாவினைக் குறித்து நம் மனதில் தோன்றும் சில குறைகளை எடுத்துக்கூறவேண்டிய கடமைப் பட்டிருப்பதால் விழாவினை நடத்தியவர்கள் தவறாக எண்ணமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

திரைப்பட உலகில் மலிந்து கிடந்த பழமை வெறியை முறியடிக்கத் தொண்டாற்றிய நடிகர்களில் நமது கலைவாணர் என். எஸ். கே. அவர்களே தலைசிறந்தவர் என்று நாம் கூறுவதை எவரும் மறுக்க இயலாது.

அதுபோலவே அவரது இத்தீவிர கொள்கைக்கு பெரிதும் துணையாய் இருந்து வந்தவர் தோழியர் டி. ஏ. மதுரம் அம்மையாராகும். கலைவாணருக்குத் திரைப்படக் கலைச் சம்பந்தப்பட்ட வரை மதுரம் அம்மையாரின் தோழமை இல்லையெனின் அவரது கலைத் தொண்டு இந்த அளவுக்குச் சிறப்படைந்திருக்குமோ யென்பதும் ஐயப்பாட்டிற்குரியதே, எனவே கலைவாணரின் தொண்டினை பாராட்ட முற்பட்டவர்கள், தோழியர் மதுரம் அம்மையாருக்கும் அந்தச் சிறப்பை அளித்திருக்கவேண்டும். தலைவனுக்குச் செய்யப்படும் சிறப்பு தலைவிக்கும் உரிமையுடையது தானே என்ற தத்துவார்த்தத்தை இங்கும் பேசப்படுமாயின் அதைவிட கேலிக்கூத்து வேறொன்று மிருக்கமுடியாது.

கலைவாணர் என். எஸ். கே., போன்றவர்கள் பொதுமக்களுக்கு உரித்தானவர்களாவர். அவருக்குள்ள புகழின் இருப்பிடம் அவரிடம் மட்டுமல்ல, பொது மக்களின் இதயத்திலும் குடிகொண்டிருக்கிறது. எனவே பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள், தியேட்டருக்குள் ஆற்றப்படும் சொற்பொழிவினைகூட வெளியேயிருந்து கேட்கமுடியாதபடி—ஒலிபெருக்கியைச் சுருக்கிவிட, அதனால் பொது மக்கள் கடும் வெய்யிலிலே கால் கடுத்து நிற்க, அவர்களைப் போலீஸ் அதிகாரிகள் விரட்ட, ஏதோ சம்பிரதாய முறைப்படி இவ்விழாவினை நடத்தியிருப்பதிலிருந்து, கலைவாணருக்குப் பொன்னாடை போர்த்த எண்ணியவர்கள் போதிய மனவளம்பெறாது போய்விட்டனரோ என்று நம்மை ஐயமுறும்படி செய்கிறது

கலைத் துறையில், என். எஸ். கே. அவர்களும், மதுரம் அம்மையாரும் பெற்றுள்ள வரவேற்புகளும் விருதுகளும் ஏராளம், அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் மனதிலே யெண்ணும்போது இப் பொன்னாடை போர்த்தும் விழா கலைவாணருக்குப் பெருமை தந்தது என்பதற்கு பதிலாக, அதை நடத்தியவர்களுக்கு வேண்டுமானால் விளம்பரம் கிடைத்திருக்கலாம்.

இவ்வளவையும் நாம் சற்று அழுத்தந் திருத்தமாக சொல்லுவதற்குக் காரணம் கலைத்துறையில், திரைப்பட உலகில்—கலைவாணர் செய்துள்ள மகத்தான பணி மட்டுமல்ல, நாடகக் கலையில் ஈடுபட்டுழைத்த ஏராளமானவர்களுக்கு கைம்மாறு அறியாது அவர் செய்துள்ள பேருதவிகளையும், அதுபோலவே தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், அரசினர் தொடர்புடைய நிறுவனங்களுக்கும், அவர் கலைத்துறை வாயிலாக செய்துள்ள உதவிகளும் அளவிட்டுக் கூறமுடியாததாகும். இத்தகு சிறப்புடைய கலைவாணருக்கு பொன்னாடை போர்த்தும் நிகழ்ச்சி ஏதோ கும்பலிலே கோவிந்தா போடுவதைப்போல நடைபெற்றிருப்பது கண்டு மனவேதனை யடைகிறோம்.

நிற்க, கலைவாணர் என். எஸ். கே., டி. எ. மதுரம் அம்மையார், இருவரும் தங்கள் பணியில் மேலும் சிறப்புற்று விளங்கி அதன் மூலம் நம் நாட்டுக்கும் பயன் ஏற்படும் அளவுக்கு அவர்களின் வாழ்வு வளம் பெற வேண்டும் என்பதே நமது மனப்பூர்வமான ஆசையாகும்.

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தாஞரசியா!

கௌதமன்

4—11—55 தொடர்ச்சி

9

ஆளும் கலைக்கே புதியதோர் இலக்கியத்தை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினள் ரஸியா. நாட்டை ஆளுகின்ற மகத்தான பொறுப்பை மட்டுமல்ல; மக்களின் சுகத்தையும்; வாழ்வையும் கூடத்தான், தாம் கட்டியாளுகிறோமென்றும் அவள் எண்ணினுள். அந்தக்கடமையுணர்ச்சியும் நினைவுந்தான் அவளுக்கு இன்பபுரி காட்டும் எல்லைக் கோடுகளாயின!

சிக்கல் வழக்குகள், சிரிக்க வைக்கும் வழக்குகள், கோபத்தைக்கிளறும் வழக்குகள், சிந்தையைத் தொடும் பிரச்னைகள், நாட்டை பாதிக்கும் பிரச்னைகள் ராஜ நிந்தனையைத் தேடிக்கொள்ளும் பிரச்னைகள், நாட்டைக் கவிழ்க்கும் பிரச்னைகள் என்று இப்படி உண்டே அரச மன்றத்தினரின் திறமையைச் சோதிப்பதற்கென்றே சில பல வழக்குகள்—அப்படிப் பட்டவைகள் எத்தனை வந்தாலும், சமாளிப்பது மட்டுமல்ல; சமநீதி வழங்கும் ஆற்றலையும், ஆர்வத்தையும் பெற்றிருந்தாள் ரஸியா! 'பெண்—அரசி' தானே என்று கேலி பேசுவோர் நாணச் சாகும்படி, வீர உடை ஏந்தி திரிந்தது மட்டுமல்ல; களம் சென்று போரிடும் வலிமையும், ஆற்றலும்கூட பெற்றிருந்தாள் அந்த வீர மங்கை!

அரசாண்ட நான்காண்டு காலத்திலே தன்னை மறந்தும் தவறிழைத்ததில்லையவள். அரச மன்றத்தைப் பொறுத்த எல்லாப் பிரச்னைகளையும், தேவைகளையும், செவ்வனே செய்து முடிப்பதில், அவள் காட்டிய அக்கரையை, உள்ளபடியே இங்கு அரசாண்ட மன்னர்கள் காட்டியிருந்தால், நாட்டின் தழும்புகள் என்றைக்கோ அகற்றப்பட்டு விட்டிருக்கும்!

மக்கள் முன்னேற பல திட்டங்கள் அவள் சேகரித்து வைத்திருந்தது முதல்—நாட்டின் எல்லைகளை வளர்ப்பதில் அவள் காட்டிய தீரம்வரை, சரிதம் பல காட்சிகளைத்தாங்கி இருப்பது உள்ளபடியே பூரிப்படையதக்கதாகும்! மேலும் அவளோர் பெண் என்பதைத் தவிர, வேறோர் குறை யிருந்ததில்லை அவள் ஆட்சியில்!

புகழ் மணக்கும் அவளாட்சியில் களங்கம் இருந்ததில்லை. அவளைப் பொறுத்தமட்டில் களங்கம் விளைவிக்க அவளும் துணிந்ததில்லை, ஆனாலும் களங்கம் கற்பித்தனர் சில நல்லவர்கள்!/—பழித்தனா! ஆனால் இவைகளெல்லாம் பிற்கால நிகழ்ச்சிகளாகும்!

ரஸியாவைப் பொறுத்தமட்டில் நாட்டில் பல சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்வதன்மூலம், அணையாத நற்பெயரெடுத்து விட்டாளந்த ஆரணங்கு. புதிய பயனுள்ள கல்வி நெறிகளை ஆதரித்தாள். புலவர் தம்மைப் போற்றினுள். கவிஞர்களை ஊக்குவித்தாள். மதத்தை வளர்த்தாள். மத குருமார்களைப் போற்றினுள்! தொழுகைக்குத் தவறியதில்லை! இஸ்லாமியக் கலாச்சாரத்தைக் கட்டிக் காக்கவும், அவள் தவறியதில்லை! சுருங்கச் சொன்னுல் ஆல்டாமிஷன் நெஞ்ச அலைகளை நன்கு பிரதிபலித்தாள் ரஸியா!

ஒரு பண்பட்ட ஆட்சி முறையால், மக்களைப் பெரிதும் கவர்ந்த கண்ணியமுள்ள பெண்ணரசி ரசியாவைத்தவிர வேறெவரும் அந்த நேரம்வரையில் இவ்விந்திய மண்ணிலே, குறிப்பாக டெல்லிப் பீடத்திலே அரசோச்சிய தில்லை! தன்னைப் பிடிக்காதவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு அவள் பிற்காலத்தில் மிக மிக அரதிஷ்டவசமாக இலக்காகி விட்டபோதிலும், அரச மன்றத்தைப் பொறுத்த மட்டில் கருணையுள்ளமும், கவர்ச்சிகரமான வழிமுறைகளும் கொண்டு அவள் அரசோச்சியதை எவரும் மறந்துவிட முடியாது எளிதில்!

பேரரசி ரஸியாவுக்கு ஆட்சி முறையில் அக்கரையும் ஆர்வமுமிருந்ததைப் போல, பின் சொந்த வாழ்க்கையின் போக்கிலும், மகிழ்ச்சியிலும் கூட கொஞ்சம் அக்கரையும் ஆசையும் இருக்கத்தான் செய்தன! வாழ்க்கைக் கபலமும், பருவ நெகிழ்ச்சிகளும், அவளையும் வாட்டி வதைக்கத்தான் செய்தன! தனிமையை அதிகமாக விரும்பிப் போற்றிடும் அவளுக்கு, மெளள, மெள்ள, பருவ தாகம் ஏற்பட்டதிலும் ஆச்சர்யமில்லைதான்! பேரழகன் 'ஜமால்' அந்த ஆசையைத் தட்டியெழுப்பும் தூண்டுகோளாக, அருகிலேயே இருக்கும்போது, வயதால் பக்குவமடைந்து, மனதால் காதலித்துக் கிடந்த அந்த முல்லைக்கொடியாள் மட்டும் அசைந்தாடாமளா இருப்பாள்! எனவே காற்றிலே அசைந்தாடிய கொடி முல்லை படரவும் ஆரம்பித்தது! பட்டம் கிடைக்கப் பாடுபட்ட அந்த ஆணடிமையின் உள்ளத்தைக் சுற்றிப் படரவும்செய்தது அந்த அரும்புமுல்லை! அடிமை ஜமாலை வெகுநாட்களாகவே அவள்மறந்ததில்லை. அவன்மீது கொண்டிருந்த அந்த உள்ள ஆசையை, அவள் வெகு நாட்களாகவே மறைத்து வைத்திருந்தாள்! ஆனல் பட்டம் கிடைத்ததும் தன் பசும்பொன் மேனியைத் தொட்டு மகிழும் ஓர் நினைக்க முடியாத பெருவிருந் தொன்றையும் ஜமாலுக்கு அள்ளிப்படைக்க முன்வந்தாள் ரஸியா!

அந்த ஆடலழகியின் அந்தப்புரந்தில் ஜமாலுக்கு மட்டும் கட்டுக்காவலிருந்ததில்லை! தடையென்னும் வார்த்தை அவளால் பொறுத்தமட்டில், அவள் மாளிகைக்கு மட்டுமல்ல; அவளின் இதயத்திலும் இருந்தது கிடையாது! அடிமையாயிற்றே என்ற எண்ணத்தையும் அச்சத்தையும்அவள் என்னைக்கோ நீக்கி விட்டாள்! கட்டமைந்த அவன் உடலில் தன் எண்ணத்தையே பறிகொடுத்துவிட்ட அந்தப் பெண்மயிலாளுக்கு, ஜமாலின் அந்தஸ்துதான ஒரு முக்கியம்? தான் நினைத்தால் அவனை இமயத்தின் உச்சியிலும் வைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கும்போது, அந்தஸ்து என்னும் அந்த நினைவுச்சுழல் அவளை வெகுவாக பாதிக்கவில்லை! ஆனல் அடிமை ஜமாலுக்குத்தான் அவளின் எண்ணமே புரியவில்லை வெகு நாட்கள் வரையில்! சொல்—செயல்—ஒவ்வொன்றும் புதிது புதிதாக இன்பம் மிளிரும் வகையில், தினமும் வெளிவரும்போதுதான் அவனும் புரிந்து கொண்டான் அரசியின் ஆசைப் பெருக்கை!!

ஆளும் மன்றம் போய் வரும் நேரம் தவிர்த்து, மற்றய நேரங்களைத் தனிமையில் செலவிடப் பழகிக் கொண்டிருந்தாள் ரஸியா. அரண்மனை நந்தவனமும் பளிங்கு நீரோடையும், குயிலிசையும், மயில்களின் நடனமும் அவளுக்கு ஆறுதலளிக்கும் பொருள்களாயிருந்தன பல நாட்கள் வரையில்—ஆனல் அவைகள் எங்கும் ஆறுதல் பருவ தாகத்தை எப்படித் தணிக்க முடியும்?

வளைந்து ஓடும் நீரோடையின் சலசலப்பு மனதிற்குச் சாந்தியைத்தான் தரமுடியும்—சுற்றிப்படர்ந்த நந்தவனம் குளிமை மருவும் தென்றலைத்தான் வளர்த்துத்தரமுடியும்குயிலின் இனிமையும், மயிலின் அருமையும், சிந்தையைத்தான் குளிரவைக்க முடியும்—ஆனல் ஆசைப்பிணிக்கும் அதுதான மருந்து!! கூடி மகிழும் ஜோடிப் புருக்களைக் காணுகின்றபோதும்; துள்ளி இணைந்திடும் மானினத்தின் கண்கவரும் காதற் காட்சிகளைப் பார்க்கின்ற போதும்; கவிஞன் இசைக்கும் மனோ ரம்மியமான இன்னிசையிலே, காதற் கருத்துக்கள் சிதறியோடி வந்து செவிகளிலே ஒலிக்கின்றபோதும்; கலையிலே, களி—நடனத்திலே, எழிற் காட்சியிலே உள்ளத்தைச் சிறையிடும் மனேபாவங்கள், நெளிந்து காணப்படுகின்றபோதும்; இளமையின் விளிம்பிலே நின்று ஆசை, அன்பு என்ற இருவேறு எண்ணங்களை மனதிலே தேக்கி வைத்துக்கொண்டு, காதற் சிலையுருவாய்—கனிவாய் மொழி பேசும் கட்டழகப் பொற்சிலையாய்—காலக்கருவியின் மூலம் உலகின் போக்கை கவனித்து மட்டுமல்ல; அதனின் ஒரு சில பகுதிகளை முறையாக ஆண்டுகொண்டும், வருகின்ற வடிவழகி ரஸியாவுக்கு, மட்டும், அவளின் வளர்ச்சிகளை எப்படி செயலற்று வைத்திருக்கத் தோன்றும்!!

எனவே—'கயலெழுதி, வில்லெழுதி, காமன் செயலழுதி, தீர்ந்த முகம்—திங்களோ காணீர்!' என்றழைக்கிறதே தமிழகத்தின் ஐம் பெரும் காப்பியங்களிலே ஒன்று, அதைப்போல திங்கள் முகம் படைத்த அந்தக் குளிர்வதனத்தாளைக்கண்டு, பேசி, கொஞ்சி, குலவி, மகிழ—மகிழ்விக்க அழைக்கப்பட்டான் ஜமால்!

'ஜமால்!' என்றதுமே அவன், அருகிலே வந்து நிற்கும் பாணியே அலாதி!

ஜமால்! இன்று ஓர் அழகான சித்திரம் கண்டேன்—அது ஓர் விசித்திர வழக்கின பிரதி பலிப்பு!—என்பாள் ரஸியா!

அப்படிப்பட்ட விசித்திரம்—சித்திரத்தின் ரூபத்திலுமா—இருக்கிறது இளவரசியாரே! என்பான் அந்த அப்பாவி!

ஆமாம்—! கேள். ஆனல் ஒன்று—வழக்கை, எங்கே—எவா—எப்போது—தொடுத்தது என்று மட்டுமே விவரம் கேட்டுவிடாதே......மிகவும் சங்கடப்பட்டு விடுவேன் நான் பதில் சொல்ல...!!! ஓவியத்திலே அப்படியொரு காட்சி அவ்வளவு தான்...! பூம்பொழில் சூழ்ந்த ஓர் தடாகத்தின் ஓரத்திலே, ஒரு முல்லைக் கொடி—அதிலேயிருந்து தவறிய முல்லை யொன்று, சிரித்த தாமரையின் செவ்விதழிலே வீழ்ந்து விட்டது...! ஆனல் இதழ் விரித்த அந்தக்கோமள மலரோ முல்லையின் இன்மணத்தைமட்டிலும் நகர்ந்து கொண்டிருக்கிறதே தவிர அந்த அழகு முல்லையை, வண்டுகளின் படையெழுச்சியினின்றும் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணமே இல்லாமல் வாளாயிருக்கிறது. வெறும் வேடிக்கைப் பார்ப்பவரைப்போல அலட்சியப் பார்வையும் பார்க்கச் செய்கிறது! ஆனலும் அந்தக் குறும்புப் பார்வையிலே சிறிது தயக்கமும, குழப்பமும்கூட தெளியக்காணுகிறேன்! காப்பாற்றலாமா...! வேண்டாமா!—இப்படியொரு தயக்கம் அந்தத் தாமரைக்கு! எனவே தயங்குகிறது...! சிந்திக்கிறது...!

......நிலையறிந்த முல்லையோ அஞ்சுகிறது—மெள்ள கெஞ்சுகிறது!—சற்றே இதழ் போர்த்தி மறைத்திடு! என்று கமலத்தினிடம் மீண்டும் மீண்டும், கேட்கிறது—கெஞ்சுகிறது — மன்றுடுகிறது முல்லை! ஆனல் நீதியோ தாமரையின் கையிலே இருக்கிறது—அடைக்கலமளிப்பது தாமரையின் உள்ள அசைவைப் பொறுத்தினது!! வண்டுகளோ வட்ட மிட்டுக் கொண்டுதானிருக்கின்றன! சிக்கல்—நெருக்கடி—ஆனல் அதிலேயும் ஒரு சபலம்...! ஆசை — உயிர் ஊசலாடும் நிலையிலும்!—இப்படியொரு கருத்தமைந்த ஓவியம் ஜமால்—! பிரமாதமான அமைப்பு!!

இதென்ன வழக்கோவியமா...! அல்லது கற்பனையின் புது உருவா...? இளவரசியாரே!

இரண்டு மில்லை ஜமால்...!

பின்பு...!

மனப் போராட்டத்தின் எதிரொலி! என்றுதான் வைத்துக் கொள்ளேன்!

புதிர் இளவரசியாரே...! ஒன்றும் புரியவில்லை!!

ஜமால்! உனக்கு இது கூடவா புரியவில்லை! கடமையையும் அன்பையும்மட்டும், சரிவர குழைத் தூட்டப் பழகிக் கொண்டாயேதவிர உள்ள வேதனையை புரிந்து கொள்ளத்தான் உனக்குத் தெரியவில்லை; அதனைப் பழகிக்கொள்ளவும் காணேம்!

மேலும் குழப்பம் இளவரசியாரே...!

குழம்பாதே ஜமால் எதனையும்புன்னகையால் வரவேற்கப் பழகிக் கொள், ரஸிகன் காணும் சித்ரம் உயிர்பெற்று வந்ததாக எண்ணிக்கொள்—உனக்குக் கிடைத்திருக்கும் இடம்மட்டுமல்ல, சந்தர்ப்பமும் கிடைத்தற்கரியது! அந்த வாய்ப்பு எவருக்கும் கிட்டாது. நீ நினைத்திருக்கமாட்டாய்...! நினைக்கத் துணியவும் மாட்டாய்...! ஆனலும் நீ விரும்பாதது—உனக்குக் கிட்டாதது—கிட்டினல் ராஜத் துரோகமென்று உன்னல் கருதப்படுவது உனக்குக் கிடைத்திருக்கிறது. உன்கண்ணெதிரிலே—உனது கரத்தருகே—இதழ் விரித்து முகமலர்ந்து கெஞ்சும் நிலையிலும் காத்துக் கிடக்கிறது—ஜமால்...!

சிக்கல்தான் அதிகரிக்கிறது இளவரசியாரே...!

நீ சரியென்றல் தேன் சொட்டும்—அமுதம் ஊறும் அணைத்தும் மகிழலாம் ஜமால்...!

நீங்கள்......!

என்ன சொல்லுகிறீர்களென்று கேழ்க்காதே...! ஜமால்...! வா...இப்படி...!! இந்த உன் கரங்களுக்குத்தான் என்ன கோழைத்தனம்...! உன் சிந்தையில் தான் எவ்வளவு ஆர்வமின்மை...! தோண்டுமிடத்திலே தங்கமும், வெட்டியெடுக்குமிடத்திலே வைரமும், கிடைக்கின்றபோது, நீ ஏன் அவைகளையெல்லாம் இரும்பென்றும் வெறும் பாறைகற்களென்றும் அலுத்துக் கூறி ஒதுவிடப் பார்க்கிறாய்...! இளவரசியாயிற்றே—முடிதரித்தவளாயிற்றே—மோசம் விளையுமே தொட்டால்—அழிந்துபடுவோமே ஆசைக்கண் பார்த்தால், என்றெல்லாம் நினைத்து நினைத்து பித்தனைப்போல ஸ்தம்பித்து நிற்காதே...! இந்த மலர்க்கரம் அ[illegible] வரையும் தொடாது—உனக்குமட்டு[illegible]தான் அந்த பாக்கியம்...! இந்தகுளி[illegible] பார்வை கண்டவரை யெல்லாம் வரவே[illegible]காது...அத்தகைய அந்தப்புரங்க[illegible] இப்பெரும் புவியில் இருக்கிறது என்[illegible]லும், ஜமாலுக்காக காத்துக்கிட[illegible]கிறுள் என்பது மட்டுந்தான் உண்மை[illegible] ஜமால்...!!

[மௌனம்]

பேசமாட்டாயா ஜமால்! வே[illegible]டாம்! நீ பேச வேண்டாம். [illegible]

8-ம் பக்கம் பார்க்க

எங்கும் விற்பனையாளர்கள் தேவை

மனதிற்கு மகிழ்ச்சி யூட்டுவது

'அரசு' சுகந்த பாக்குத் தூள்

ம. சு. ராசன்
அரசு பாக்குத் தூள் தயாரிப்பவர்
பழனி ரோடு, திண்டுக்கல்

M. S. RAJAN
Arasu Betel Nut Manufacturer
Palani Road DINDIGUL

மார்ஷல் புல்கானின்
தோழர்· குருசெவ்
(வழிநிலை: இந்தியா)

மதிப்பிற்குரிய தலைவர்களே; வணக்கம். இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரம் அடைந்த எட்டு ஆண்டுகளுக்குப் பின் தாங்கள் வருகைதந்திருக்கிறீர்கள். எனினும் உங்களின் வருகை எந்தவகையில் சிறப்பிக்கப்பட வேண்டுமோ அத்துறையில் இன்றைய ஆளும் வர்க்கத்தினர் ஆவன செய்யாமல், ஏதோ சம்பிரதாய முறையிலும், தனிப்பட்ட இரண்டொரு நபர்களின் புகழ் மங்காமலிருந்தால் போதுமானது என்ற எண்ணத்தைக் கொண்டுமே, உங்களின் வருகையும் அதனால் ஏற்படவேண்டிய நன்மைகளுக்கும் வேலி போடப்பட்டிருக்கிறதாக அறிகிறேன்.

இது எவ்வாறாயினும், டில்லியில் தங்கியுள்ள கடந்த ஆறு நாட்களாகத் தாங்கள் இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மக்கள் சுதந்திரமடைந்த எட்டு ஆண்டுகளுக்குப் பிறகும், தங்களின் உரிமைக்காகப் போராட வேண்டிய சூழ்நிலை இருந்துதான் வருகிறது என்பதற்கான நிகழ்ச்சிகளைத் தாங்கள் இருவரும் நேரில் கண்டிருப்பீர்கள்! எனவே இது குறித்து யான் அதிகம் கூறவேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

நிற்க, வடநாட்டிலுள்ள பெரிய தொழிற்சாலைகள் அணைக்கட்டுகள் ஆகியவைகளைப் பார்வையிட்டுள்ள தாங்கள் இருவரும் தென்னாட்டுக்கு வருகை தரும்போது இங்குள்ள தொழிற் சாலைகள், அணைக்கட்டுகள் ஆகியவைகளின் விவரத்தை ஒருவாறு அறியக் கூடுமென்று நம்புகிறேன்.

தென்னாடும்—வட நாடும் அரசியல் பொருளாதாரத் துறையில் சரிசிகர் சமானமாகவும் என்றென்றும் நேசப்பான்மையுடனும் இயங்குதல்வேண்டும் என்பது மட்டுமல்லாமல் உலக நாடுகளுடன் உண்மையான தோழமை கொள்ள வேண்டும் என்ற உயரிய கொள்கைக்காக பணியாற்றிவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றித் தாங்கள் அறிந்திருக்கக் கூடுமோ, இல்லையோ என்பது எனக்கு ஐயப்பாடாகவே யிருக்கிறது.

எல்லா அதிகாரங்களையும் ஒரு பகுதியிலேயே அதுவும் ஒரு சாராரிடத்திலேயே குவித்து வைத்துக் கொள்வதால் பிறரின் வாழ்வும், தன்மானமும் எவ்வளவு பாதிக்கப்படுகிறதென்பதைப் பொருட்படுத்தாத ஆட்சி முறைதான் இந்தியாவில் இன்று இயங்கி வருகிறது ஆட்சிபீடத்திலுள்ளவர்களின் நிலை கண்டுகூட ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்பேர்பட்டவர்களுக்கு சமயம் நேரும்போதெல்லாம் துதிபாடும் கோஷ்டியினரான இந்நாட்டு கம்யூனிஸ்டுகளின் அரசியல் செப்படி வித்தைகளைக் கண்டுதான் ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

இதைப்பற்றியெல்லாம் நம்மிடம் சொல்லுகிறனே—நாமென்ன நியாயம் தீர்க்கவா வந்திருக்கிறோம்· என்று நீங்கள் எண்ணக்கூடும். நானும் அதை நன்றாக உணருவேன்· எனினும் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தியாவுக்கும், ருஷ்ய நாட்டுக்கும், இடையே வளர்ந்திருக்கவேண்டிய நல்லுறவு உருவாக்கப்படாமல், ஏதோ வாயளவில் சோஷலிஸம், சமதர்மம், பொதுவுடமை உலக சமாதானம் என்றெல்லாம் தப்பட்டை யடித்துவரும் இந்திய ஆட்சியாளரின் வெளி வேஷத்தையும் அதைவிட அர்த்தமற்ற போக்கில் இந்நாட்டிலுள்ள கம்யூனிஸ்டுகள், தீவிரவாதம்பேசி அதேசமயத்தில் வடநாட்டு முதலாளித்துவத்திற்கு மறைமுகமாக ஆதரவு தருவதுடன், பழமை வெறிக்கும் வக்காலத்து வாங்கி 'ஜால்ரா' தட்டுவதுமான விசித்திரங்களைத் தாங்கள் உணரவேண்டும் என்பதற்காகவே இம் மடலில் இதைக் குறிப்பிட்டுள்ளேன்.

ஆகவே, உங்களின் வருகை எல்லா வகையிலும் பயனுள்ளதாய் இருந்திருக்கவேண்டும் என்ற ஆசையுடைய யான் வாழும் எங்கள்நாடு தனிஉரிமைப் பெற்றிருப்பின், அந்த சர்க்கார் இதற்கு ஆவன செய்திருப்பார்கள். ஆனால் இன்று தாங்கள் தென்னாட்டுக்கு வரும் உங்களை வரவேற்கும் சர்க்கார் டில்லி ஆட்சியாளருடைய ஏஜெண்டுகளின் நிலையில்தானிருக்கிறார்களேயன்றி உரிமைபெற்ற ஆட்சியாளராய் இல்லை'

எனினும், இந்தியத்துணைக்கண்டத்திலுள்ள மக்கள், இன கலாச்சார வழிப்படி தங்கள் தங்கள் நாட்டினைச் சுதந்திரமாக நடத்திச்செல்லும் வாய்ப்பு விரைவில் ஏற்படத்தான்போகிறது. அதுபோது தாங்களோ அல்லது தங்கள் நாட்டில் ஆட்சிப்பொறுப்பிலுள்ள தலைவர்களோ தென்னாட்டுக்கு—திராவிடத்துக்கு வருகை தரும்போது மக்கள் அனைவரும் மனதார வரவேற்கும் மறுமலர்ச்சியை கண்ணாரக் காணக்கூடும் என்பதைக் தெரிவித்துக் கொள்வதுடன், தென்னாட்டுக்கு வருகை தரும் தங்கள் இருவரின் வரவு நல்லரவாகுக என்று கூறி பணிவன்புடன் வரவேற்கிறேன்.

—கூத்தரசன்

●

தோழர். தென்னேட்டி விசுவநாதம்
(கர்னூல்)

அரசியல் துறையில் அலுத்துப்போய் அமர்ந்திருக்கும் தென்னேட்டி விசுவநாதம் அவர்களே வணக்கம், சென்ற வாரம் தங்களுக்காக நடத்தப்பட்ட பாராட்டு விழா ஒன்றில், மதராஸ் மனதே என்ற பல்லவியை அபஸ்வரக் குரலில் பாடி விழாவின் தன்மையையே கெடுத்து விட்டிருக்கிறீர்கள்.

முறைப்படி விசாரிக்கப்பட்டு முடிவுக்கு வந்துள்ள ஒரு பிரச்னையை மீண்டும் கிளறுவதில் இன்றைய ஆந்திர அமைச்சர்கள் தங்களின் அபாரத்திறமையைக் காட்டுவதைப்போலவே—ஆந்திர மாநிலத்தின் முன்னாள் அமைச்சராகிய தாங்களும் மதராஸ் மனதே என்று தங்களின் வாயை அகல விரித்துக் கூப்பாடு போட்டிருக்கிறீர்கள்!

சென்னை நகரம்,ஆந்திரத்துடன் சேர வேண்டும் அல்லது தனி மாகாண மாக்க வேண்டும், இதற்காக சென்னையிலுள்ள ஆந்திரர்கள் ஆவனசெய்ய வேண்டும் என்று உபதேசம் செய்திருக்கிறீர்கள்!

தென்னேட்டியாரே, கேளும், தமிழகத்தின் அமைச்சர்கள் என்னதான் டில்லிக்கு பயந்தவர்களாயிருப்பினும், தமிழகத்திலுள்ள மற்றவர்களும் அதுபோலவே சந்தர்ப்பவாதிகளாக இருப்பர் என்று தாங்கள் கருதுவீர்களேயானால் அதைவிட மட்டரகமான எண்ணம் வேறுயிருக்கமுடியாது என்பதை தங்கள் புத்தியில் பதியவைத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

சென்னை நகரம் தமிழகத்திலிருந்து துண்டிக்கப்பட வேண்டும் என்ற வீண் வேலையில் காட்டும் உமது அறிவையும் ஆற்றலையும், விசாலஆந்திரம் விரைவில் அமைக்கப்பட வேண்டும், அப்படி அமைக்கப்படும் விசால ஆந்திரம் வடநாட்டுக்கு அடிமைப்படாததாக இயங்க வேண்டும் என்பதற்கான செயல்களில் தாங்களும் தங்களைப்போன்றகடுமாற்ற நிலையிலுள்ளவர்களும் முனைவீராக.

—கூத்தரசன்

நடக்க இருப்பவை

கூம்பூர்

தி· மு கழக துவக்கவிழா 25-11-55 மாலை 4-மணிக்கு முத்தாலம்மன் கோயில் திடலில் நடைபெறும். தோழர்கள், வ. வீரராசன், பி· சமதர்மம், கோ.வெங்கடாசலம், பி.ஐயா· பேசுவர்,

பம்பாய்

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்டம் 27-11-55 காலை 10-மணி யளவில், மாதுங்கா கிளைச் செயலாளர் தோழர் அன்புச் செழியன் அவர்கள், சயன் அவுசிங் போர்டு T15-18-A-161 எண் இல்லத்தில் நடைபெறும். அதுபோது கவிஞர் கண்ணதாசன் அவர்களின் பம்பாய் சுற்றுப்பிரயாணம் பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டியதிருப்பதால், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும், கிளைக் கழக செயலாளர்களும் குறித்த காலத்தில் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன் என பம்பாய் தி. மு கழக பொதுச்செயலாளர் எஸ்· தியாகராசன் அறிவிக்கிறார்:

பெங்களூர்

தி· மு· கழக சார்பில் 27—11—55 அன்று பெங்களூர் நகரில் தோழர் எஸ்· வி. பதி தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெறும். கலைஞர் கருணாநிதி, முல்லை சக்தி மற்றும் பலர் பேசுவர், நன்கொடை அணா 8, 4.

மாயூரம்

ஆசிரியர் வேலாயுத மன்ற 5-ம்ஆண்டின் புதிய நிர்வாகிகள் தேர்வு, 27-11-55 ஞாயிறு இரவு 8-மணிக்கு மன்றக் கட்டிடத்தில் நடைபெறும். மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டப்படுவதாகச் செயலாளர் அறிவிக்கிறார்·

குடியேற்றம்

நகர தி.மு. கழக சார்பில் 27-11-55 ஞாயிறு மாலை 6-மணிக்கு ஆற்றில் பொதுக்கூட்டம்நடைபெறும். தோழர் டி. கே. சீனிவாசன் பேசுவார்.

சென்னை-செம்பியம்

திரு. வி. க. மன்ற சார்பில் 27—11—55ஞாயிறு மாலை 6-மணிக்கு பெரவள்ளூர் சுந்தரராச பெருமாள் கோயில் தெரு வடக்கில் திரு. வி· க. நினைவு நாள் கூட்டம் நடைபெறும். தோழர். எஸ். பக்கிரிசாமிப் பிள்ளை, எம். எல்· ஏ·, தலைமையில், தி. மு· க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், ஞானசம்பந்தம் பேசுவர்:

கோயமுத்தூர்

அழகிரி நினைவுப் படிப்பக சார்பில் 27—11—55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு தாமராசு கோயில் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழியர். அருண்மொழி, மு ராமசந்திரன், சி. டி· தண்டபாணி பேசுவர்.

அரியலூர்

திராவிட மாணவ, முன்னேற்றக் கழக சார்பில் கடைவீதி அடுத்த திடலில் 28-11-55 திங்கள் மாலை 6மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும்.தோழர் என். வி· நடராசன் பேசுவார்.

திருமணங்கள்

மாயூரம்— 27—11—55 ஞாயிறு காலை 9-மணிக்கு கூறைநகர் வியபாரி செட்டித் தெருவில் தோழர். எம். கணபதி—கோ. ருக்மணி ஆகியோருக்குக் திருமணம் நடைபெறும். தோழர் வி. சங்கையன் தலைமையில் என். எஸ். இளங்கோ, என்· சிட்டப்பா, ஆர். கணேசன், எம். சி·, பேசுவர்.

சலகண்டபுரம் 27-11-55 ஞாயிறு காலை 9-மணிக்கு செட்டியார் தெருவில் மணமகனுர் இல்லத்தில் பகுத்தறிவு ஆசிரியர் புதல்வி மங்கையர்க்கரசிக்கும், மு. பழனியப்பனுக்கும் திருமணம் நடைபெறும்.

கோவை— 27—11—55 ஞாயிறு காலை 7 30 மணிக்கு ஒக்கிலியர் காலனி 29/49-ம் இல்லத்தில், தோழர். உ. குணாளன்—இலட்சுமி ஆகியோரின் திருமணம், தோழர்· எஸ். எ. ராசமாணிக்கம் தலைமையில் நடைபெறும். தோழியர் அருண்மொழி, புலவர்கள் சுந்தரனார், மருதவாணனார் பேசுவர்.

தென்பகுதி ரயில்வேமென்ஸ் யூனியன் (பொன்மலை)

பதிவு எண் 1647.

தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியன் மத்திய நிர்வாகக்குழு விசேட கூட்டம் **4—12—55** விழுப்புரத்தில் நடைபெறும். அதுசமயம் கீழ்கண்டவைகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கூட்டுப் பொதுச்செயலாளர் [ஏ· கே· சச்சிதானந்தம்] தன்னிச்சையாகவும், சர்வாதிகாரத் தோரணையிலும் நடந்துகொள்ளுவதாலும், பொன்மலை, திருச்சி கிளைகள் யூனியன் கொள்கைக்கு புறம்பான காரியங்களில் ஈடுபடுவதாம் எவ்வளவோ முயற்சித்தும் எதிர்பார்த்த அளவிற்கு அவர்கள் திருந்தவில்லையாகையால் தான் பொதுச் செயலாளர் பதவியினின்றும் விலகிக் கொள்ளுவதாக திரு. வ, வீராசாமி. B A, M P. அவர்கள் எழுதிய கடிதம்பற்றி விவாதித்தல்.

கூட்டுப் பொதுச்செயலாளர் பொன்மலை திருச்சி, பெரம்பூர் கிளைகளின் மீது எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி யோசித்தல்,

கூட்டுப் பொதுச்செயலாளர் மீது நம்பிக்கை இல்லை என்று செங்கல்பட்டு கிளை கொண்டு வந்திருக்கும் தீர்மானம் பற்றி யோசித்தல் முதலியன.

எல்லா கிளை செயலாளர்களும், தலைவர்களும், மத்திய சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் கலந்து கொள்ளும்படி பணிவுடன் வேண்டிக் கொள்ளுகிறேன்·

அன்பன்.
சீ: இராகவானந்தம். (மத்திய சங்கத் தலைவர்)

குடியாத்தம் ராஜா தியேட்டரில்

கலைஞர். மு. கருணாநிதியின், எழுத்தோவியம்—புதிய நாடகம்

26—11—55 சனி முதல், தினசரி இரவு 10 மணிக்கு

இலட்சிய நடிகர், எஸ். எஸ். ராஜேந்திரன்

நாடக மன்றத்தார் நடிக்கும்

மணிமகுடம்

கட்டணம்: 2—0—0, 1—8—0, 0—12—0, 0—9—0, 0—6—0

பிரதி. ஞாயிறு தோறும் மாலை 6-45. மணிக்கு
திங்கள் தோறும் விடுமுறை,

தி. மா. மு. கழக 2-வது மாநில மாநாடு

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு சென்னை கோகலே மண்டபத்தில், 19-11-55 காலை 9 மணியளவில் துவங்கிற்று.

மாநாட்டிற்குத் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை தாங்கினர்.

மாநாட்டில், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணு, தி. மு. கழக துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோரும் மற்றும் பல தோழர்களும் கலந்துகொண்டனர்.

மண்டபம், கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் கண்ணைக்கவரும் வகையில் அழகு செய்யப்பட்டிருந்தது. மண்டபம் முழுவதும், மாணவத் தோழர்கள் பெருந்திரளாலும், மற்றும் பொதுமக்களாலும் நிரம்பி வழிந்தது.

மாநாட்டுத் துவக்கத்தில் தோழர் சீனுவாசன் இரண்டொரு இயக்கப் பாடல்கள் பாடிய பின்னர், தோழியர் ஸ்ரீ. கஸ்தூரி அவர்களது இசைவிருந்துடன் மாநாடு துவங்கிற்று.

மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர் தோழர் பொன்னுவேலு, மாநாட்டில் கலந்து கொண்ட அறிஞர் அண்ணு, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் மாநாட்டுத் தலைவர் கே. ஏ. மதியழகன் ஆகியோரையும். மற்றுமுள்ள தோழர்களையும், மாணவத் தோழர்களையும் பொதுமக்களையும் வரவேற்று பேசினர்

பின்னர், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்து, மாணவர்கள் கடமை குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினர்.

பின்னர், வரவேற்புக் குழுத்தலைவர் தோழர் பொன்னுவேலு அவர்கள், மாநாட்டுக்குத் தலைமை வகித்துத் தருமாறு தோழர் மதியழகன் அவர்களை முன்மொழிந்தார். அதனை வழிமொழிந்து, சென்னை சட்டக் கல்லூரித் தோழர் வி. சிவப்பிரகாசம், மதுரை நகர் தி. மா. மு. கழகத் தோழர் பாண்டியன், புதுக்கோட்டை தி. மா. மு. கழகத் தோழர் நாகராசன், சென்னை பச்சையப்பன் கல்லூரித் தோழர் விசுவநாதன். கா, அறவழகன். சு. ஆறுமுகம் ஆகியோர், தோழர் மதியழகன் அவர்கள் தமது கல்லூரி நாட்களிலிருந்து—கடந்த 10 ஆண்டுக் காலமாக இன்றுவரை திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்காக, தளராத ஆர்வத்துடனும், சலியா உழைப்புடனும் ஆற்றி வரும் அரும்பெரும் தொண்டினை எடுத்துக்கூறிப் பேசினர்.

பின்னர், தலைவர்-தோழர் மதியழகன் தலைமையுரை ஆற்றினர்.

அடுத்து அறிஞர் அண்ணு, தோழர் என். வி. நடராசன் ஆகியோர் பேசினர்.

அண்ணு அவர்கள் பேசுகையில், திராவிட மாணவர்களின் கடமை குறித்தும், நாட்டுக்கு அவர்கள் செய்யவேண்டிய நற்பணி குறித்தும், மாணவத் தோழர்களுக்குச் சிறந்த முறையில அறிவுரை கூறினர்.

முதல் பக்கத் தொடர்ச்சி

ருஷ்யப் பிரதமர் புல்கானின் சரியான பாடம் புகட்டியிருக்கிறார்!

*

முதல் கோணல் — முற்றிலும் கோணல் என்பார்களே, அது போலவே, நேரு சர்க்கார், மாநில புது அமைப்புக் குழுவை அமைத்த அவலட்சணத்தின் விளைவு, அகோரத் தாண்டவமாக முடிந்திருக்கிறது. டில்லியில்தங்கியிருக்கும் சோவியத் தலைவர் புல்கானினுக்கு இச் செய்தியும் விருந்துவகைகளில் ஒன்றாகஇருந்திருக்குமென்று நம்புகிறோம்.

20-11-55 அன்று பம்பாய்மாநில காங்கிரசின் சார்பில் பம்பாயில் ஒருபொதுக்கூட்டம் நடைபெற்றதாம். மாநில புது அமைப்புக்குழுவின் அறிக்கைபற்றி அனைத்திந்திய காங்கிரஸ் செயற்குழுவில் செய்யப்பட்ட முடிவை ஆதரித்து இக்கூட்டத்தில் பம்பாய் மாநில முதலமைச்சர் மொரார்ஜி தேசாய், பம்பாய் காங்கிரஸ் தலைவர் பட்டீல் பேசினராம்!

தனி மராட்டிய மண்டலம் அமைத்தல் வேண்டும் என்ற கொள்கையுடைய ஏராளமானவர்கள், கூட்டத்தில் கேள்விகள் கேட்டதிலிருந்து வாய்ச் சண்டையாக ஆரம்பித்து செருப்பு, கல் முதலியவைகளை ஒருவர் மீது ஒருவர் வீசி எறிந்துத் தாக்கவும், கட்டுக் கடங்காத கலவரமும் ஏற்பட்டு, பம்பாய் பிரதமருக்கு பெருங் காயமும், பம்பாய் காங்கிரஸ் தலைவருக்கு சிறுங்காயமும் ஏற்பட்டதாம். கூட்டத்திலிருந்த ஒலிபெருக்கிக்கும் பெருத்த நட்டமாம்!

அதுமட்டுமா! அக்கலவரத்தில் பலியானவர்கள் 15 பேர்; காயமடைந்தவர்கள் 276; கைதானவர்கள் 160; தீக்கிரையான மாடிபஸ்கள் 8; ஆக, பம்பாய் நகர சபைக்கு இதனால் பொருள் நட்டம் மட்டும் ஏறத்தாழ 6 லட்சம் ரூபாய்; என்று இவ்வாறெல்லாம் விவரம் வெளியிடப்படுகின்றன.

நேரு சர்க்காரின் அழைப்பின் பேரில் இந்தியாவுக்கு வந்துள்ள சோவியத் தலைவர்கள், இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் மக்கள் தங்களின் உரிமைக்காக இன்றுங்கூட ஆங்காங்கு கிளர்ச்சிகளில் ஈடுபடுவதும், அதனால் அடக்குமுறை கொடுமைக்கு ஆளாகும் அவல நிலையையும் நேரில் காணும்போது மனதில் என்ன எண்ணியிருப்பர்! அதனைத்தான் தோழர் குருசெவ் "அடிமையாகக் கிடந்த மக்களை கிளப்பிவிட்டு உரிமை பெறுபவர்கள் மீண்டும் அதே மக்கள் தங்களின் உரிமையைக் கேட்கும் போது அவர்களை அடக்கி ஒடுக்கும் பிற்போக்குத் தன்மை ஒழிய வேண்டும்" என்று மறைமுகமாக—அடிக்காமல் அடித்து —கூறியிருக்கிறார்!

சோவியத் தலைவர்களின் முன்னிலையிலேயே ஆசிய ஜோதியின் புகழ் பிசுபிசுத்து விட்டது!

இந்நிலை கண்டு, நேரு பண்டிதரும், பொதுவாக "டில்லி தேவதைகளும்" முணு முணுத்துக் கொண்டிருக்கிறார்களாம்!

அந்தோ பரிதாபம்-பரிதாபம்!

சுல்தானு ரசியா தொடர்ச்சி

பேசுகிறேன்! ஈனே கரம்பற்றுகிறேன்! இதோ இந்தக் கரத்தின் அழகுதான் என்ன! கருமைதான்—ஆனாலும் திண்மை மிக வாய்ந்ததல்லவா! ஆஹா இந்த அகன்ற உன் மார்பகத்திலே, என் மலர்முகம் பொதிந்து விடும்போது, ஏற்படும் உயிர்தளிப்பால் இந்த உலகையே மறந்து விடலாமென்று கூட தோன்றுகிறது ஜமால்!

ஜமால்! இன்னும் கூடவா அச்சம்!

இல்லை! இனிமேலும் அச்சப்படவில்லை ஜமால்...! அந்தமலர் முகத்தாளை அந்தத் திண்தோளன் இனியும் கூட அணைத்துக் கொள்ளத் தயங்கவில்லை!

வெண்மதியைக் கார்முகில்கள் மூடி மறைப்பதைப் போல, அந்தக் கனக மயிலாளைத் தன் இருகரம் விரித்து, வாரியணைத்துத் தன் மெய்க்குள்ளே மறைத்தே விட்டான் ஜமால்! தாமரை மூல்லைக்கு அடைக்கலம் தந்து விட்டது இதழால் மூடி மறைத்து விட்டது! அணைத்துக்கொண்டது! இப்போதோ அந்த ஆணழகன் அணைப்பிலே இந்த அரசிளங்குமரி!! ஆஹா! அந்த அணைப்பில் தான் என்னசுகம்! அதில் கிடைக்கும் இன்பம் தான் எவ்வளவு கொள்ளை...! கொள்ளை!! அப்பப்பா ஆசை, அன்பு, காதல் அதையொட்டிய எதிரொலிகள், ஆகிய இவையத்தனைக்கும் ஒருங்கே திரண்டு கிடைத்த சுவையான பரிசல்லவா அந்த அணைப்பு...! எப்படியிருக்கும் அதன் எதிரொலிகள்! சரி! சரி! போகட்டும்... நமக்கேன் இன்னும் அந்த மனமுருக்கும் காட்சிகளின் கற்பனைப்பெருக்கு...! நாமிங்கையே நிற்கலாம்—அவர்கள் சென்று திரும்பி வரட்டும்...!!

ஆம்! திரும்புகிறார்கள் — தங்களின் நெடுநாட்களின் ஆசைகளுக்குத் தொடுவானத்திலே, நினைவுக் கோட்டைகள் பல எழுப்பி விட்டுத் திரும்புகிறார்கள் அந்தப்புது உறவுக்காரர்கள்...! ஆனால் இனித்தானே புயலும் இடியும்! எப்படியோ ஒன்று அவள் தந்த அன்பு மணிமகுடத்தை ஏற்றுக் கொண்டான் ஜமால்...!

வானவில்லே—வளர்பிறையே சுவையமுதே குளிர்மதியே நிறையின்பப் பணப்பிடமே! நீதான் என் அன்புச் சுரங்கம்—! என் காதற்பனியருவி! உன்னைத் தொட்டாற் குளிர்கிறது!-விட்டால் சுடுகிறது!! என்றெல்லாம் அமுத வசனங்களைப்பேசி தன்னிளம்காதலிக்கு புத்துணர்வையும், புதுப் பொலிவையும், தேடித்தர சமாலுக்குத் தெரியாவிட்டாலும். பேரரசியின் பிறை நுதலில், அன்பு முத்திரைகளைப் பொரிக்கமட்டும் அவனுக்குத் தெரியாமலிருந்ததில்லை!

பாலைவனத்தின் கொடுமைக்கனல் வீசும் மணற் பரப்பிலே, பேரின்பம் கண்ட 'கயஸ்-லைலா'வைப்போல்—கவிஞனின் கற்பனைக் கீதத்தால் ஈர்க்கப்பட்டு, கலையுலகினின்றும் திசைமாறி, அரண்மனை நந்தவனத்தையே காதற் கோட்டையாக்கி, இறுதியில் தன் காதலனுக்கு வெண்ணீர்ப் பாளையிலே பலிபீடம் சமைத்து: அவனை வெந்து, கருகி, சாம்பலாக்கவிட்டு, அந்தச் சோகமும், பாசமும் தாங்காமல், தானும் உயிர் விட்டு. டெல்லியிலே, காபூல் வாயில்கள் (Kabul gates) சொல்லக் கூடிய சோலை வெளிகளிலே, முப்பதினாயிரம் மரங்களும், செடி கொடிகளும் மடர்ந்த புனித மண்ணிலே கல்லறைக்குப்போய்மறைந்துவிட்ட முகலாயமன்னன் ஔரங்கசீப்பின் மகள் *ஜெபினிஸா—எவ்வளவோ வீரரும், பிரபுக்களும், இளவரசர்களும் தன்னைச் சூழ்ந்து, நின்று. தன் கடைக்கண் பார்வைக்குக் காத்துக்கிடந்தும், ஓர் சாதாரணக் கவிஞன் அக்குவில் கானிடம் உளம் கட்டுண்டு இன்பம் கண்டதைப்போல் —இளவரசி ரஸியாவும் அந்த அபிசீனிய ஆணழகனிடம் தன் அலைமோதும் இன்ப நினைவுகளுக்குச் சாந்தி கண்டாள்!!

* கவிஞன் பிரிவு தாளாமல் உயிர் விடுத்த இளவரசி ஜெபினிஸாவின் கோரியும் கல்லறையும் சென்ற நூற்றாண்டிலே ரயில்பாதைகள் போடப்பட்டபோது, அநியாயமாகத் தகர்த்தெறியப்பட்டு அதன் மீதுதான் ரயில் பாதைகள் போடப்பட்டதாக வரலாறு நமக்கு சோகக்குரலில் அறிவிக்கிறது!

Kenneth Saunders
'A Pageant of India'

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1

மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

REGD No. 13817.

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர்:

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு
தஞ்சாவூர்

11—11—55 தொடர்ச்சி

13

(காட்சி 28-ன் தொடர்ச்சி)

பலவேசம் : நீ கலையரசியாகத் தானே வேண்டும் — அதற்காக கவலை ஏன்? ஊரும் உலகமும் உன்னைப்பற்றிப் புரிந்து கொள்ளும்படி செய்து விடுகிறேன். நாடெல்லாம் இந்த நாட்டிய ராணியைப் பற்றியே பேச்சாகி விட்டால் உன் வேதனை தேய்ந்து விடுமல்லவா?

வள்ளி : புகழ்—ஒரு மணல் மேடு, அதையல்ல நான் விரும்புவது. அழியாத கலைச்சோலையிலே புதுக் குயிலாகி அமர காவியம் பாட நெஞ்செல்லாம் ஆசை கொண்டு விட்டேன். பகல் இரவாகட்டும்; நிலவு தேயட்டும் வளரட்டும், காலத்துக்குக் கவலையில்லை. ஆனால்...எனக்கிருக்கிறது கவலை—வேதனை! அர்த்தமில்லாமல் காலத்தைத் தின்று ஜீரணித்த பழைய வள்ளி அல்ல நான், கலையின் ஒளி விளக்கைக் கரத்திலே தாங்கப் போகும் புதுமை வள்ளி—புரட்சி வள்ளி!

ப : புதுமொழி பேசும் பூங்கொடி! நீ நடந்து வந்த பாதையை மாற்றிக் கொண்டாயே! திசை தெரியாமல் நின்று திண்டாட வைத்து விட்டாயே! உன் எண்ணங்கள் எப்படியோ அப்படியே நடந்து கொள். ஆனால் இந்த ஏழை ரசிகனை மட்டும் அடியோடு வெறுத்து விடாதே,

வ : வரம்பு மீறாத வரை—வெறுப்பும் வளராது !

ப : போய் வருகிறேன்-வள்ளி!

வ : அவசிய மிருந்தால்-நானே அழைக்கிறேன்.

(பெருமூச்சோடு கைகளை விரித்துக்கொண்டே பலவேசம் வெளியேறுகிறான்)

O

காட்சி :—29

இடம் : நடைபாதை

நிலைமை [வீரனைச் சந்திக்கிறான் பலவேசம். கையிலுள்ள பத்திரிகையைத் தருகிறான் வீரன். பலவேசம்பத்திரிகையை விரித்துக்கொண்டே...]

பல : கலை முரசு ! ...... யாருக்கப்பா இது !

வீரன் : எல்லாம் நம்ம வள்ளிக்குத்தான்...பலவேசம் இப்ப அதுக்கு ஒரே கலைப் பைத்தியம். கால் கடுக்க ஆடுறது மில்லாமே கலை கலைன்னு தலை தலையா அடிச்சுக்குது.

பல : ஆமா வீரா...நான் கூட இப்ப வள்ளியைப் பார்த்திட்டுத்தான் வர்ரேன். அடடா...என்னையே ஒரு கலக்குக் கலக்கிடுச்சு. பழைய அன்புப் பேச்சையெல்லாம் மூட்டை கட்டிவச்சிட்டு... அறிமுக மில்லாதது போலவே அளந்து கொட்டுச்சு ! இந்தக் கலைப் பைத்தியம் ரொம்ப சீரியஸா ஆயிடுச்சுன்னா உயிருக்கே ஆபத்து வந்திடும் வீரா.

வீ : அவ்வளவு தூரத்துக்கு ஆகாதுப்பா...ஏதோ வாலிப காலம் அதுவும் ஆட்டக்காரி பாரு துடுக்கும் மிடுக்கும் இருக்கத்தான் செய்யும். நம்ம அனுசரிக்கனும் பிரதர்.

ப : இந்த நேரம் பார்த்து வள்ளிக்கு கலைப் பைத்தியம் பிடிச்சிருப்பது ரொம்ப ரொம்ப நல்லதாத் தெரியுது எனக்கு. நம்ம ஏற்பாட்டைப் பற்றி வள்ளி புரிந்து கொள்ளாமலிருப்பதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமேதான். கடைசிக் கட்டத்தில் வள்ளியின் தொல்லை வேறு இருக்குமோவென்று பயந்தேன்...நல்லவேளையாக வள்ளியே—நமது பாதையிலிருந்து விலகிக்கொண்டாள்.

வீ : நம்மைப்பற்றி நன்றாகத் தெரிந்து கொள்வதற்காக இந்த 'விலகல்' நாடகம் நடத்தினாள்...?

ப : எதையும் நம்ப முடியவில்லை வீரா... எதற்கும் எச்சரிக்கையாகவே யிருப்போம். சந்தனக் காட்டிலிருந்து நல்ல வாடை மட்டு மல்ல...... நல்ல பாம்பும் கிளம்புவதுண்டு!......எங்கிருந்து எதிர்ப்புக் கிளம்புமென்று எதிர்பார்த்தோமோ அங்கிருந்து எதிர்ப்பு கிளம்பவே யில்லை! நாம் யாரை சாமானியமாக நினைத்தோமோ அங்கிருந்துதான் இப்போது புயல் கிளம்புகிறது.

வீ : யாரது?

ப : கோகிலா!...அந்த வீம்புக்காரிதான் நம்மை வழி மறித்து நிற்கிறாள். நமது ரகசியமும், நடை முறைத்திட்டங்களும் அவளுக்குத் தெரிந்து விட்டது. அந்தக் மோமாளிப் பெண் கோகிலா ஏமாளி மூர்த்தியிடம் ஏதாவது கூறிவிட்டால்...நிலைமையே மாறி விடும்!

வீ : அப்படி சூழ்நிலை நமக்குச் சாதகமாக அமையா விட்டால்...

(வீரன் பலவேசத்தின் காதில் ஏதோ ரகசியம் பேசுகிறான். பலவேசமும் மலர்ந்த முகத்தோடு தலையசைத்து ஆமோதித்துக் கொண்டே....)

ப : ஆமாம் அப்படித்தான் செய்யவேண்டும். அதுதான் நமது இறுதி முடிவாக இருக்கட்டும்!

O

காட்சி—30

இடம்—ஆற்றோரம்.

நிலைமை [ஆற்று மணலிலே சாய்ந்திருக்கிறான் மூர்த்தி...... அவனருகே ஆடி அசைந்து வருகிறாள் அழகு வள்ளி]

மூ : வள்ளி!

வ : அத்தான்!

மூ : நானொரு பாலைவனம் ! என்னை நாடுகிறாயே நீ !

வ : நிழலின் அருமை வெய்யிலில் காய்ந்தவளுக்குத் தானே தெரியும். நீரோடை நீங்கள்... தேடிவரும் புள்ளிமான் நான்,

மூ : அந்த அழகுவார்த்தைகள் என்னை ஏமாற்றுவதற்காக சிருஷ்டிக்கப்படாம லிருந்தால் மகிழ்வேன் நான்.

வ : என்னிடமும் நீங்கள்தோல்வியையா எதிர்பார்க்கிறீர்கள் !

மூ : தோல்விப் பள்ளத்திலே விழுந்து எழுந்தவன்தானேநான்.

மா. தங்கவேலர்

வடுக்கள்கூட இன்னும் மறையவில்லையே !

வ : தோல்வியையே தொடர்ந்து — சந்தித்த கஜினிகூட வெற்றியின் தூதுவனாகித் திரவில்லையா?

ப : இது உன் சரித்திர அறிவைத் தெளிவாக்கத்தான் பயன்படுகிறது,

வ : அன்றைய வரலாறுகள் இன்றைய வாழ்வுக்காரர்களுக்கு வழிகாட்டிகள் என்று தான் நான் நம்புகிறேன். இசைக்கு இதயத்தைக் கொடுத்த அரசர்கள். 'கவி பாடியவர்களுக்குச்சிரந்தாழ்த்திய புவியாண்டவர்கள்.' முரசிலே படுத்துறங்கிய தமிழ்ப் புலவனை சட்டத்தின் கண்களின் முன்னே நிறுத்தாமல் சாமரம் வீசிய செந்தமிழ் மன்னன் ! ஏழைத்தமிழாசிரியரின் தேன் கவிதைக்குத் தன் தலையையே விலையாகத்தர முன் வந்த பைந்தமிழ் கோமான் !...... ஆகியோர் ஆற்றிய அரும்பணிகளைப் படிக்குந்தோறும், நினைக்குந்தோறும்...வரலாறு பற்றிய எண்ணங்கள் இனிக்கத்தானே செய்கின்றன.

மூ : வாழ்ந்த பெருமைகளை வரலாறு கூறும்போது கசப்பதில்லை தான் ! ஆனால் அந்தப் பெருமையின் நிழல் கூட இப்போது அந்த எண்ணங்களின் மீது சலிப்புத்தான் ஏற்படுகிறது.

வ : சரித எண்ணங்கள் சலிப்பைத் தருகின்றனவா?...... மறத்தமிழன் மங்காப் புகழ்பெற்ற தங்க விளக்கு தமிழ் மன்னன் இராவணன் ஆண்டு மாண்ட இலங்கையிலே நான வாழ்ந்த போது-வளர்ந்த போது 'வாழ்ந்த பெருமை'களை எண்ணுவேன். சிந்தையெல்லாம் தேன்பாயும். கடல்தாண்டி ஒலித்த கன்னித் தமிழரசியின் குரல் இன்னும் என் காதுகளிலே எதிரொலித்துக் கொண்டேதானிருக்கிறது ! இளங்கோ காட்டிய சிலம்பைக் காணும்போது தமிழ் மன்னனின் நீதி தெரிகிறது! சுந்தரத்தின் மனோன்மணி காதலின் இலக்கணத்தைக் காட்டிவிடுகிறாள் ! சங்கப் புலவர்கள் தங்கத் தட்டிலே நமக்கென வைத்துத்தந்த கவிதைப் பரிசுகள் இன்றும்நமது பார்வைக்கு முன்னே தானிருக்கிறது. ...இவைகளை யெல்லாம் காணும்போது சலிப்பா தோன்றும்! நானொரு தமிழச்சி என்று கூறுவதிலே எவ்வளவு இன்பமிருக்கிறது தெரியுமா?

மூ : வள்ளி ! உன் தமிழறிவையும் கலை நெஞ்சையும் காணக் காண உண்மையிலேயே நான் வெட்கப் படுகிறேன். உன்னிடம் இந்த நல்ல அன்பும், உலகப் பண்புமிருக்குமென்று நான் நினைக்கவே யில்லை!

வ : இங்கே தமிழ்க் குளத்திலே நீந்திய பிறகுதான் என் உள்ள அழுக்கெல்லாம் நீங்கியது, அதுவும் உங்களைக் கண்ட பிறகு என் எண்ணமெல்லாம் புது நினைவுகள்...சாகாத கருத்துக்கள் என் கலைக்கனவுகள் நடைமுறையாகி விட்டால்...அத்தான்...... அமைதியான இரவு; அழகான புத்தம் புதிய எனது நாட்டியத்தை அரங்கேற்றட்டுமா, உங்கள் முன்னே!

(ஆடத் துவங்குகிறாள் அழகு மயில் வள்ளி...ஆடி முடிந்ததும்)

மூ : கன்னித் தமிழ் காத்த நிலத்தில் கலை வளர்க்கும் பெண்ணே! பொன்னூருக்கு வெள்ளத்திலே மிதந்து வந்த புதுநிலவே! சின்னஞ் சிறகடித்துப் பறக்கும் என் சிங்காரப் பைங்கிளி! கலை கண்டேன் — நிலை மறந்தேன்! வான் முட்டும் புகழ் பரப்பி... தேன் சொட்டும் வாழ்வு காட்டும் என் இன்பத் தென்றலே...உன் அசைவிலே என் பழைய எண்ணங்கள் பட்டுப்போய் விட்டன. நான் புது மனிதனாகி விட்டேன் —நீ என் தோளைத் தொத்தும் கிளியாகி விட்டாய்,

வ : அத்தான்...வாழ்வுகிடைத்தது எனக்கும்!

மூ : இருவருக்குந்தான்—வாழ்வு. இன்ப வாழ்வு!

(அடுத்த வாரம்)

தனிச் சிறப்பு பெற்றது !

செல்வம் பாக்குத்தூள்

திறமையான தயாரிப்பு ! விலையோ மலிவு !

காலணுவுக்கு 2 பொட்டலங்கள்

முக்கிய நகரங்களுக்கு அநுபவமும், திறமையுமுள்ள ஏஜண்டுகள் தேவை.

M. சிவராமன்,

உரிமையாளர் ; செல்வம் பாக்குத்தூள், போல்பேட்டை குடியாத்தம் N.A.

பஞ்சாப் கட்டுரை

நான் கண்ட சந்த்ராம்

ஜாட் - பாட் - தோடக் மண்டல் (2)

ஜாட்-பாட்-தோடக் மண்டல் தோன்றிய வரலாற்றினையும், இயங்கிய முறைகளைப்பற்றியும், கடந்த வாரக் கட்டுரையில், ஓரளவு கண்டோம். இவ்வாரம் அம் மண்டலைப் பற்றிய மேற்கொண்ட விவரங்களை யறிவோம்.

ஜாட்-பாட்-தோடக் மண்டலின் விதி முறைகள் யாவை!

அக்கழகத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும், 16 வயதிற்கு மேற்பட்ட பெண்களும் உறுப்பினர்களாகலாம்.

உறுப்பினர்களுக்குள் ஒரு ஆணோ அல்லது பெண்ணோ, எச்சாதியா யிருப்பினும், தனக்குப் பிடித்தப் பெண்ணையோ அல்லது ஆணையோ, மனம் ஒப்பத் திருமணம் செய்துகொள்ளலாம். உறுப்பினர்களுடைய பிள்ளைகளும், பெண்களும், எவ்வித சாதி பாகு பாடின்றிக் கலப்புத் திருமணம் செய்து கொள்ளலாம்.

கழக உறுப்பினர் கட்டணம் ஆண்டொன்றுக்கு இரண்டு ரூபாய்,

சந்த்ராம் வாய் வேதாந்தியல்ல; காரிய வீரர் என்பதற்கு, அவரது மறு மணத்தையே ஒரு எடுத்துக் காட்டாகக் கூறலாம். பிறருக்கு உபதேசிக்கும் கொள்கைகளைத் தாமே கடைபிடித்து ஒழுகுபவர் என்பதற்கு அதுவே போதிய சான்றாகும்.

கலப்புத் திருமணம்

சந்த்ராம், தமது முதல் மனைவியை இழப்புக் கொடுத்தபிறகு, 1929-ல் மறு மணம் புரிந்து கொண்டார் என்பதை முன்னைய கட்டுரையில் கண்டோம்.

இரண்டாவது மனைவியாக அவருக்குற்றவர் ஒரு கன்னி விதவை! மஹாராஷ்டிரப் பெண்மணி! அவரே, நாம் ஆரம்பத்திலிருந்து கூறிவருகிற திருமதி சுந்தர்பாய் அம்மாள். அந்த அம்மையார் இன்றும் சந்த்ராமின் நிழலென வாழ்ந்து, தம் கணவருக்குப் பலவகையாலும் தொண்டு செய்து வருகிறார்.

சந்த்ராம்—சுந்தர்பாய் திருமணம் மூவகைச் சிறப்பு வாய்ந்தது! முதலாவது விதவைத் திருமணம்! இரண்டாவது சாதி பாராத கலப்புத் திருமணம்! மூன்றாவது பஞ்சாப் மாகாணத்தைச்சேர்ந்தவர், மஹாராஷ்டிர மண்டலத்துப் பெண்ணை மணந்தவகையில் மாகாணக் கலப்புத் திருமணம்!

கலப்புத் திருமணத்தில் மிக்க உறுதிபூண்டவர் சந்த்ராம் ஆதலினாற்றான், யாம் நேரில் அவரைக் கண்டபோது, "சாதி நோயின்வேரை அறவே கல்ல வல்ல மருந்து கலப்பு மணமே என்பது என் முடிவு"—என்று நம் தமிழ்த் தென்றல் திரு. வி. க. கூறியுள்ளார்— என்று கூறியதைக் கேட்டு பெருமிதங் கொண்டார்.

கலப்புத் திருமணத்தில் சந்த்ராமும், அவரது சாதி ஒழிப்புக் கழகமும், எவ்வளவு அக்கரையுடன் பணிபுரிந்தார்கள்; அப்பணிக்கு எவ்வளவு எதிர்ப்புகள் இருந்தன என்பதை பெரியார் நடத்திய "ரிவோல்ட்" என்னும் ஆங்கில ஏடு அளிக்கும் தகவல்களைக்கொண்டு காண்போம்:

Recently two inter-Caste marriages have been celebrated under the auspices of the Jat-Pat-Torak Mandal, Lahore ; one at Chiniot Dist., Jhang (Punjab) and other at Lhaksar Dist., Saharanpur (U. P.) The opposition was severe.

[Revolt : Page 333 : 25-8-1929]

அதாவது: ஜாட்-பாட்-தோடக் மண்டல் சார்பாக இரு கலப்புத் திருமணங்கள், ஒன்று பஞ்சாப், சினியாட் வட்டத்தைச்சார்ந்த ஜாங் என்னும் ஊரிலும், மற்றையது யு. பி. சகரன்பூர் வட்டத்தைச்சார்ந்த லக்சார் என்னும் ஊரிலும், பலத்த எதிர்ப்புகளுக்கிடையே நடந்தேறின:

[ரிவோல்ட்: பக். 333: 25—8—1929]

இந்தியாவில் பரவலாக, யார் யார் கலப்புத்திருமணங்கள் செய்து கொண்டார்கள் என்பதனைக் கணிக்க, கணித்ததை ஏனையோருக்கும் அறிவிக்க, ஒரு குறிப்பேடு தயாரிக்க முற்படலானார் சந்த்ராம். அதன் விவரத்தை "ரிவோல்ட்" வாயிலாகவே அறிவோம்:

JAT-PAT-TORAK DIRECTORY.

Jat-Pat-Torak Mandal, Lahore, has decided to include in their Directory, which is to be published shortly, a list of inter-Caste marriages so far contracted in India. All those who can supply the Mandal with list of such marriages (no matter how small they may be) should communicate them to the Secretray of the Mandal at an early date.

[Revolt : Page 238 : 29-5-1929]

ஜாட்-பாட்-தோடக் அட்டவணை.

அதாவது: லாகூரில் இயங்கும் ஜாட்-பாட்-தோடக் மண்டல் ஒரு அட்டவணைத் தயாரிக்கத் தீர்மானித்திருக்கிறது. அது விரைவில் வெளியிட வேண்டியுள்ளது. அதில் இந்தியாவில் இதுகாறும் கலப்புத் திருமணம் செய்துகொண்டோரின் பட்டியல் விவரங்கள் அடங்கியிருக்கும். எனவே யார் யார் மண்டலத்திற்குக் கலப்புத் திருமணச் செய்திகளை (மிகக் குறைந்த அளவாயினும் பாதகமில்லை) அனுப்பக்கூடுமோ அவர்கள் விரைவில் மண்டல் செயலாளருக்கு அனுப்பி வைப்பாராக. [ரிவோல்ட்: பக். 238: 29—5—1929] ஆக இவ்வாறெல்லாம் கலப்புக் திருமணங்களைக் கவலையுடன் போற்றி, சாதி நோயின் வேரைக் கல்ல அரும்பாடு பட்டிருக்கிறார் சந்தராம்.

'திருவேடம்'

ஜாட்-பாட்-தோடக் மண்டல் 1922-ல் துவக்கியபோது, அதைச்சார்ந்தவர்கள், பெருத்த கிண்டல் பேச்சுக்கும், தூற்றுதல்களுக்கும், அவமானங்களுக்கும் ஆளாக நேரிட்டது.

ஆரம்பத்தில் அவர்கள் தங்களை "மதத்துவேஷிகள்" என்று கூறிக்கொள்ள வெட்கப்பட்டனர்.

நாளடைவில் நிலைமை மாறி, தலை நிமிர்ந்து பணியாற்றிப் புகழ் பெற்றனர்.

அவர்கள் மாநாடு கூட்டும் செய்திகளை அவ்வப்போது 'ரிவோல்ட்' பத்திரிகைக்கும் தெரிவிப்பார்கள் அவைகளுள் மாதிரிக்கு ஒவ்வொன்றைக் காண்போம்:

JAT-PAT-TORAK CONFERENCE

The Secretary, Jat-Pat-Torak Mandal writes: It was decided to hold an All-India Jat-Pat-Torak Conference at Lahore during Christmas week this year. It was also decided to exploit the occasion by the publication of a number of tracts and pamphlets and also by special demonstrations A sub-Committee has been formed to workout a suitable programme for the Conference, which will be published shortly,

[Revolt: Page 279 : 7-7-1929]

ஜாட்-பாட்-தோடக் மாநாடு.

அதாவது: ஜாட்-பாட்-தோடக் மண்டல் செயலாளர் எழுதுகிறார்:— இவ்வாண்டு கிருஸ்துவ விழா வாரத்தினபோது ஜாட்-பாட்-தோடக் மண்டல அகில இந்திய மாநாடு நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. எண்ணற்றத் துண்டு பிரசுரங்கள், அறிக்கைப் பத்திரங்கள் வழங்க சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ளவும் முடிவுசெய்யப்பட்டது. அம்நாடு (சாதி ஒழிப்புப்) போராட்ட வெள்ளோட்டங்கள் நடத்திக் காட்டவும் இருக்கின்றது. இத்திட்டங்களை நிர்மாணிக்கவும், இன்னும் தோதான நிகழ்ச்சி நிரல் திட்டவும் துணைக்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது: விவரம் விரைவில் வெளி வரும்.

[ரிவோல்ட்: பக். 279: 7-7-1929]

எனவே, சாதியென்னும் ஆறாப்புண்ணை ஆற்றுவதை விடுத்து பகட்டுச் சேலைபோட்டு மறைக்கப் பார்த்த மதப்பித்தர்களை மறித்து, பற்பல மேடைகளில் சாதி ஒழிப்பு, தீண்டாமை யகற்றல், கலப்புத் திருமணம், இந்து முஸ்லிம் ஒற்றுமை என்ற தலையாய பிரச்னைகளைக் குறித்துப்பேசி, மக்களைத் திருத்திய பெருமை, சந்த்ராமிற்கும், அவர்கண்ட ஜாட்-பாட்-தோடக் மண்டல் என்ற கழகத்திற்கும், என்றென்றைக்கும் உண்டு.

இத்தகைய வெற்றியோடு கூடிய சீர்திருத்தச் செயல் சாமான்யமானதா! ஒரு காலத்தில், தோழர். காந்தியாரே, சாதிச் சாக்காட்டை நேரிடையாகத் தட்டிப்பேச பயந்தாராம். காந்தியாரால், அத்துறையில் யாதும்செய்ய முடியவில்லையே என்று அவர் தம் ஏக்கத்தை ஜாட்-பாட்-தோடக் மண்டலத் தூதுகோஷ்டிக் குழுவினருடம் தெரிவித்திருக்கிறாராம்

திருவாங்கூர் சர்க்கார் போக்கு!

The "Kranti" Banned:— An A. P. I. message dated 9th July states that the Travancore State has banned the monthly journal "Kranti", the Organ of the Jat-Pat-Torak Mandal (Society for abolition of Caste system) on the ground that the journal advocates the breaking of caste

[Revolt : Page 288 : 14th July 1929]

அதாவது: "கிராந்தி"க்குத் தடை:—ஜூலை 9, ஏ. பி. ஐ. செய்தி கூறுவதாவது; திருவாங்கூர் சமஸ்தானம் "கிராந்தி" என்னும், ஜாட்-பாட்-தோடக் மண்டலின் (சாதி நிர்மூலக் கழகத்தின்) ஏட்டைத் தடைசெய்து விட்டது. காரணம்? அது சாதி கட்டுப்பாட்டைச் சீர்குலைக்கப் பறைசாற்றித் திரிகிறது! [ரிவோல்ட் : பக். 288: 14-7-1928] சாதி கட்டுப்பாடுச் சனியன், அப்படியே இருக்க வேண்டுமாம்! என்னே! திருவிதாங்கூர் சர்க்காரின் போக்கு!

இதைக் கண்டித்து யாம் எழுதுவதைவிட "ரிவோல்ட்" பத்திரிகை சுடச்சுட எழுதிய, காரசாரமான, தலையங்கப் பகுதிகள் சிலவற்றைக் கண்டே தெளிவோம். "ரிவோல்ட்" (1929) பக். 281-2]

BRAHMIN—RIDDEN TRAVANCORE

......The Travancore Government in collaboration with the Brahmin Dewan, not to mention their Brahmin satellites, has banned a journal for no other fault except its advocacy of the breaking of caste

...The "Kranti", the humanitarian journal, has terribly freightened the Sanatanic-or omitting the two letters—the "Satanic" Government, anl attribute which the Patriots' are so fond of using.

...The Dewan is adding insult to injury by banning the Kranti'

...The Devan is rubbing the sore instead of healing the wound...He is adding fuel to the fire

...We are sorry for the repressive attitude of the Government The 'Kranti' the organ of the Jat-Pat-Torak Mandal is doing yeomans service in the sphere of social reeonstruction. Its chief work, the breaking of Castc distinctions, by means of inter caste marriages and inter--dining is sure to be ef immense benefit to the Hindu Community The Mandal through its organ is rendering such a great service to our caste-ridden country, that even the so called patriots with their brass throats and the large amount of public funds are not capable of doing a thousandth part of its

The Mandal, in short, is a achieving whatthe greatest of social reformers of the past failed to do.

...In banning Kranti the Ruler has fallen prey to the heartless machinations

இலங்கைச் செய்திகள்

பொரளை தி மு. க.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகப் பொரளைக் கிளையின் செயற்குழு கூட்டம் ஞாயிற்றுக் கிழமை 6—11—55 இரவு 7மணி அளவில் தோழர் இரா. அழகையா அவர்கள், தலைமையில், நடைபெற்றது. கடந்த மூன்று ஆண்டுகால மாக செயலாளராகயிருந்து பணியாற்றிய, தோழர், ஞா. சி. அன்பழகன் அவர்கள். ஓய்வின் காரணமாக, அனுப்பிய விலகல் கடிதம் செயற்குழுவில் ஏற்கப்பட்டு. செயலாளர் தெரிவுநடைபெற்றது அவ்வயம், துணைச் செயலாளராக பணியாற்றிய தோழர் எ. எஸ். சண்முகவேல் அவர்கள். செயலாளராகவும் துணைச் செயலாளராக தோழர். கே. காயம்பு அவர்களும் ஏகமனதாகதெரிவு செய்யப்பட்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேறின:

கழக இரண்டாவது ஆண்டுவிழாவை எதிர்வரும் டிசம்பர்மாதம் முதல் வாரத்தில் கொழும்பு தென்பகுதியில் நடத்துவது.

கண்டியில் நடக்க விருக்கும் இ, தி. மு. க. பொதுக்குழுவை இச் செயற்குழு கூட்டம் வரவேற்கிறது.

சமீபத்தில் கண்டியில் நடந்த பொதுக் கூட்டத்தில் தமிழரை அவமதித்து பேசிய புத்த சன்னியாசியை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கொழும்புக் கிளை

இலங்கை தி. மு க, கொழும்புக் கிளையின் செயற் குழுக் கூட்டம் கழகப் பணி மனையில் 6—11—55 அன்று தோழர் எம். முத்தார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது,

நவம்பர் இறுதியில் நடக்க விருந்த ஆண்டு விழாவை அடுத்துவரும் 'தம்பி' ஆசிரியர் தோழர் தில்லை—வில்லாளன் அவர்களைக் கொண்டு, நடத்துவதென்றும் நாள் பின்னர் தீர்மானிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது,

துணைச் செயலாளர் தோழர் வி. எஸ் முருகன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

கொள்ளுப்பிட்டி கிளை

இலங்கை திராவிடர் முன்னேற்ற கழக கொள்ளுப்பிட்டி கிளையின் ஆதரவில் தீபாவளி கண்டனக் கூட்டம் கடந்த 6-11-55 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு கொள்ளுப்பிட்டி கழக பிரச்சார மண்டபத்தில் உயர்திரு ம. யோ. தேவதாசன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தீபாவளியை திராவிட பெருமக்கள் கொண்டாடி மகிழ்ச்சி யடைவதை கண்டித்து கைவல்ய சுவாமி, தந்தை பெரியார் அவர்களின் ஆராய்ச்சி மிக்க விளக்கங்களை கூறி செயலாளர் இரா. ச. பொன்னம்பலம் வரவேற்று பேசினர்.

தலைவர் தேவதாசன் அவர்கள் முன்னுரையில் ஆரியர்கள் தம்கலை, பண்பாடு வேத-புராணங்களை திராவிட நாட்டில் நுழைய அனுமதி யளிக்காத காரணத்தால் செந்தமிழ் மன்னர்களை அரக்கர்கள்—அசுரர்கள்—என்று தம் குள்ள நரி ஏயலால் தீட்டிவைத்த ஏடுகளை நம் மக்கள் இருபதாம் நூற்றாண்டிலும் நம்பி வாழ்கின்றார்கள் என்பது வேதனையாக இல்லையா! தமிழ் நாட்டில் தன் சரக்கு விலை போகாமல்இருப்பதால் அடிகளார் திருக்கூட்டம் ஈழம் நோக்கி மாரியவலை வீசுகின்றது. திராவிட செம்மல்கள் செயல்வீரர்கள். வஞ்சக வலையை ஒழிக்க வேண்டும் என கூறினார்,

மற்றும் கிரண்பாஸ் கிளை முன்னாள் துணைச்செயலாளர் ஜலால், பொருளைக் கிளை துணைச்செயலாளர் சண்முகவேல் உரிமைக் குரல் ஆசிரியர் வி. எஸ். முருகன், அண்ணா பகுத்தறிவு மன்ற முன்னாள் தலைவா உமார், பதுளை மாவட்ட தி மு க. செயற்குழு உறுப்பினர் சாமி, கொள்ளுப்பிட்டி கிளை துணைச்செயலாளர் ஞா ஜோன் சாமிதாசன், முன்னணி வீரர்களான பாரூக், எம். டி மோசஸ் எஸ, ஏ காயாம்பு, இலங்கை தி மு க. பொதுச்செயலாளர் இரா. அதி. மணி ஆகியோர் விரிவுரை யாற்றினர்.

அண்ணா பகுத்தறிவு மன்றம்

தமிழும், சிங்களமும் அரச கரும மொழியாக்குக! புத்தமத போதகர்கள் அரசியலில் பங்கு கொண்டு இலங்கை மக்களின் அமைதிக்கு பங்கம் விளைவிப்பதை தடைசெய்க! என்று 29-10-55ல் நடைபெற்ற அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் செயற்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய தோழர் டி. வி. நடராசன் தலைமையுரையில் குறிப்பிட்டார். அதன் பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

கலைமன்றம், கலை அரங்கம் 'கரும்பு' ஆகியவற்றின் உரிமையாளரான தி. பிரான்ஸிஸ், அவர்களின் பாரியார். சமீபத்தில் தாயகத்தில் இயற்கை எய்தியதைக் குறித்து இம்மன்றம் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழும், சிங்களமும், அரச கரும மொழியாக்குமாறு இலங்கை அரசியலாரை வேண்டிக்கொள்கிறது.

புத்தமத போதகர்கள் புரட்சி இயக்கங்களில் புகுந்து புத்தனின் புனிதக் கொள்கைக்கு புறம்பான வேலைகளில் ஈடுபடுவதை வன்மையாகக் கண்டிக்கிறது.

சென்ற ஆண்டு நடைபெற்ற சொற்பயிற்சியை மீண்டும் தொடர்ந்து நடாத்த — தோழர்களான எம். உமர், கே. கே. தமிழ்நாதன் ஆகிய இருவரையும் பயிற்சி ஆசிரியர்களாக தெரிவு செய்தனர்,

இ. தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. அதி. மணி, 'மொழி' எனும் பொருள் பற்றி விளக்கிப் பேசியபின் செயலாளர் எம். எஸ். குமார், நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

கண்டியில்

சென்ற 12, 13, சனி ஞாயிறு இரு தினங்களும் கண்டி வி, ஆ. பாடசாலை மண்டபத்தில் கூடிய இ. தி. மு க. பொதுக் குழு கூட்டத்திற்கு வந்திருந்த பொதுச் செயலாளர் பொதுக் குழு உறுப்பினர் ஆகியோருக்கு பொது வரவேற்பு அளிக்குமுகமாக, 13—11—55 மாலை 5-30-க்கு, கண்டி நகர மண்டபத்தில், கண்டி மாவட்ட, மாயாவை சின்ன அந்தோனிமலை கிளைக் கழகங்களில் ஆதரவில், ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாயாவை கிளை கழக செயலாளர் தோழர் கி. து. மதிபழகன் தலைமை வகித்தார்,

தோழர் ப. சிவம் வரவேற்புரை நிகழ்த்தினர். இ. தி மு. க. பொதுச் செயலாளர் திரு இரா. அதி, மணி பொதுக்குழு உறுப்பினர்களின் தோழர்கள் சு. நா. சுந்தரராசன். வி. எஸ். முருகன் பா. ச, கீதம் டி. இராசன். மு வே, பெ. சாமி மணவைத் தம்பி ஆகியோர் சொற்பொழி வாற்றினர்கள்

முத்தமிழ் மன்றம்

6—11—55 ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணியளவில் எண் 75/4, செக்குப் பிட்டித்தெருவிலுள்ள முத்தமிழ் மன்ற பணிமனையில் தி. இளங்கதிர் அவர்கள் தலைமையில் மாதாந்திர செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது:

தலைவர் ஜே. சோமசுந்தரம், துணைச் செயலாளர் எல். தருமதாசன் ஆகிய இருவர் தாமாகவே விலகல் கடிதம் கொடுத்தமைக்கு அன்னவர்களுக்கும் நன்றியறிதலை தெரிவித்துக் கொண்டதோடு, அப்பதவிகளுக்கு முறையே தி. இளங்கதிர், சி. சுப்பராயன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

முத்தமிழ் மன்ற இராப்பாடசாலைக்கு தலைமை ஆசிரியராக திரு. கே. குமாரசுவாமி அவர்களை நியமித்தது.

மன்றவளர்ச்சியை முன்னிட்டு திரைப்படத்தின் மூலம் நிதி திரட்டுவதற்கான வேலையை தி. இளங்கதிர், ஏ. சொர்னலிஸ், கே. ஜி. பாலன் ஆகிய மூன்று பேர் கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிங்களத்தைப் போன்று தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்குமாறு இக்கூட்டம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

நுக கொடையைச் சார்ந்த தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் கூடப்படவிருக்கும் வட்ட மேசை மாநாட்டிற்கு மன்றத்தின் சார்பாக தி. இளங்கதிர், மா. முத்துவிநாயகம் கலந்து கொள்வது.

இவையனைத்தும் நிறைவேறியபின்னர் சுமார் 2-30 மணியளவில் எஸ். சுப்பராயன் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

---

of the Brahmin advisers· Evidently the Ruler of Travancore has canght a tartar!...

திருவிதாங்கூர்-பார்ப்பனர் ஆதிக்கம்.

அதாவது : பார்ப்பன திவானின் தூண்டுதலால், திருவிதாங்கூர் ஆட்சி, கேவலம் சாதி அகற்றுவதைப் பொறுமல், அகற்றாகப்பாடுபட்ட 'கிராந்தி' என்ற (உருது மொழி மாத) ஏட்டிற்குத் தடை விதித்து விட்டது.

மக்கள் வாழ்வைச் செப்பஞ் செய்யப் புகுந்த 'கிராந்தி' புடம்போட்டச் சனதனிக் கூட்டத்தாரை மிரட்டியே விட்டது.

'கிராந்தி'யைத் தடை செய்வதால், வெந்தப் புண்ணிலே வேல் பாய்ச்சுபவராகிறார் திவான்.

புண்ணை ஆற்றுவதை விடுத்து, நாற்றம் எழாமல் இருக்க புண்ணின்மேல் புனுகு மெருகு ஏற்றுகிறார்—திவான்.

திருவிதாங்கூரின் இவ்வடக்கு முறையைக் கண்டு வருந்துகிறோம். சமுதாய சீர்திருத்தத்திற்காக 'கிராந்தி' என்ற ஏடு அரும்பாடுபட்டு வருகிறது. இந்து மதத்தைச் சேர்ந்த அத்தனைபேர் நன்மைக்காக, கலப்புத் திருமணத்தையும், சமபந்தி போஜனத்தையும் போதித்து வருவதே அதன் தலையாயக் கொள்கை. அதற்காகவே சாதி ஒழியவேண்டுமென்று பாடுபடுகிறது.

சாதியால் பீடிக்கப்பட்டு, அலைக்கழிக்கப்பட்ட நம் இந்தியாவை, ஆளுனப்பட்ட 'வெங்கலத் தொண்டை' வீரர்கள் கரடியாகக் கத்தியும் சீர் செய்ய முடியவில்லை. பணத்தை தண்ணீராய் வாரி இறைத்தும் பயனற்றுப்போய் விட்டது. ஜாட்—பாட்—தோடக் மண்டல் இதுவரை செய்துள்ள புரட்சிகரமான சீர்திருத்தங்களில், ஆயிரத்தில் ஒரு பங்குகூட எவரும் சாதித்து விடவில்லை.

கடந்தகாலச் சீர்திருத்தங்களை மண்டல் உண்டு பண்ணி காட்டியது.

'கிராந்தி'யைத் தடைசெய்வதால் திருவிதாங்கூர் மகாராஜா பார்ப்பனர்கள் சூழ்ச்சி வலையில் சிக்குண்டவராகிறார். 'கிராந்தி'யில் கைவைத்து, மகாராஜா, கரி பூசிக்கொள்கிறார்.

...என்று இவ்வாறெல்லாம் பெரியார்—தோழர் எஸ் இராமனுஜன்—நடத்திய 'ரிவோலட்'டின் ஒப்பற்றப் பாராட்டுதலைப் பெற்றவர் சந்த்ராம்—அவரது ஜாட்-பாட்-தோடக் மண்டல் குழுவினர்—'கிராந்தி' பத்திரிகை—எல்லாம். இவ்வுண்மைகளை யெல்லாம் எடுத்துக்காட்டவே 'ரிவோல்ட்'டில் கண்டுள்ள ஆங்கில வாசகங்களைக் கொண்டு வெளியிட நேர்ந்தது.

பஞ்சாப் ஆட்சியின் போக்கு !

பஞ்சாப் ஆட்சியின் போக்கைச் சற்று கவனிப்போம்.

1933-ல் வெள்ளையர்கள் சுதேசி மக்கள் மீது அடக்குமுறைத் தாண்டவம் புரிந்த காலம்! அந்தக் காலத்தில், சந்த்ராம் 'கிராந்தி' பத்திரிகையில் **"ஓ! கெடுங்கோல் மன்னா! உனது முடிவு விரைவில்!"**—என்ற மகுடமிட்டுக் கவி ஒன்று கட்டி வெளியிட்டார். 'கொடுங்கோல் மன்னா' என்பது அரசரையே குறிக்கும், ஆதலால் இது 'ராஜத்துரோகம்' என்று கூறி சந்த்ராமைக் **கைது செய்து விட்டார்கள்.** ஆனால் 'கொடுங்கோல் மன்னன்' என்பது கவியில், கொடுமை பொருந்திய இந்துமதச் சாதியின் உருவகமே என்பதில் தெளிவடைந்த பின்னர் சந்த்ராம் விடுதலையானார்.

(அடுத்து மண்டலைப் பற்றிய மேற் கொண்ட விவரங்கள்.)

பகுத்தறிவு இளைஞர் மன்றம்

16—11—55 புதன் கிழமை இரவு 9 மணி அளவில் குடியேற்றம் பகுத்தறிவு இளைஞர் மன்றம் பொது உறுப்பினர்கள் கூட்டம் பிச்சனூர் ஆதிமூல சாமி மடத்தில் ஆ. க. திலகன் தலைமையில் கூடி, கீழ்காணும் செயற்குழுவை அமைத்தார்கள்

செயலாளர் வி. எ. தம்பிதுரை, துணைச்செயலாளர் பி. ஜி இராசன், பொருளாளர் எ. க. துரைசாமி, விளம்பர உறுப்பினர் விசுவநாதன். செயற்குழு உறுப்பினர்கள் ஆ. க. திலகன், அ. கணேசன், கா. மா, துரை, என். கே. புண்ணியக்கோட்டி, வி. டி. இராசன், வி. என். அண்ணாமலை, எம் ஜி. சந்திரன் எம். தமிழ்மணி, முனியப்பன், சண்முகம், எஸ், கே. நடராசன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் தலைவா நன்றிநவில கூட்டம் இனிது முடிந்தது.

மாணவர் மன்றம், சென்னை

ஆரம்பப்பள்ளி, ஆடல், பாடல், கதை சொல்லுதல், பேச்சு முதலிய போட்டிகள்

வழக்கம் போல் மாணவர் மன்றச் சார்பில் ஆரம்பப்பள்ளி வகுப்புக் குழந்தைகளுக்கு, டிசம்பர் 3. 4. சனி, ஞாயிறுகளில் ஆடல், பாடல் கதை சொல்லுதல் பேச்சு முதலிய போட்டிகள், சென்னையில் நான்கு இடங்களில் நடைபெறும். மேலும் விவரம் வேண்டுவோர், 17, இரத்தின முதலி தெரு, சென்னை-1 என்ற முகவரிக்கு நேரிலோ, கடித மூலமோ அறிந்து கொள்ளலாம்,

---

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

கேள்வி? பதில்.

மா. வணங்காமுடி, வடசென்னை

கே : திரு ராசகோபாலாச்சரியார் அவர்கள் சென்ற வாரம் ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்தபோது, 'கடவுள் இல்லை' என்று சொல்பவர்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டே கடவுளை சதா நினைவில் வைத்திருக்கிறார்கள் அவர்கள் தான் உண்மையான பக்தர்கள் என்று சொல்லியிருக்கிறாரே. இதற்கு என்ன பதில் கூறுகிறீர், அஞ்சா நெஞ்சனே?

ப : ஆச்சாரியார் அவர்கள் சில சமயங்களில் தம்மையும் மறந்து உணர்ச்சி வசப்பட்டு உண்மையைப் பேசிவிடுவார், உதாரணமாக அவர் சென்னை முதலமைச்சராயிருந்த போது ஆறுகோடி ரூபாய் கடன் கேட்டாரல்லவா! அதற்கான உதவியில் தென்னாட்டிலுள்ள ஒரு வடநாட்டுப் பணக்காரர்கூட சல்லிக் காசு கொடுக்க முன் வாராததைக் கண்டிக்கும் முகத்தான், திராவிட இயக்கத்தார் திராவிட நாடு கேட்பதில் மிகுந்த நியாயமிருக்கிறது என்றும் வடநாட்டு முதலாளிகள் தமிழகத்தில் வியாபாரத்தின் பேரால் சம்பாதிக்கும் பெரும் லாப வேட்டையைத் தடுக்க தம்மால் முடியமென்றும் கூறினர்!

அது போலவே—மாநில புது அமைப்புக் குழுவின் அறிக்கையைப்பற்றித் தமது கருத்தை கல்கி வாயிலாக தெரிவித்தபோது—எல்லா அதிகாரங்களையும் டெல்லியில் குவித்து வைத்துக்கொண்டு, மொழி வழிப்படி மாநிலங்களைப் பிரித்துக் கொடுப்பதில் அர்த்தம் இருக்கிறதா யென்று கேள்வி கேட்டு மறைமுகமாக வடநாட்டு ஆதிக்கத்தைக் கண்டித்திருக்கிறார்!

அதுபோன்று உண்மையான ஆத்திகர்கள் யார் என்பதை—ஆச்சாரியார் அவர்கள் தாங்கள் குறிப்பிட்ட கூட்டத்தில் தம்மையும் மறந்து கூறிவிட்டார்! ஆண்டவன் பேராலும், வேதங்களின் பேராலும் வெளிவேஷம் போட்டுவரும் ஆத்திகர்களைவிட கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப்போக வேண்டுமென்றும், அன்பும் அறிவுமே ஆண்டவன் என்று அவ்வப்போது எடுத்துக் கூறி வருபவர்களே உண்மையான ஆத்திகர்கள் என்பதை ஆச்சாரியார் அவர்கள், மனம் விட்டுக் கூறியதை வரவேற்கிறேன்.

ஆனல், இப்படி சில சமயங்களில் அவர் கூறும் உண்மையான கருத்துக்களை முக்கிய சந்தர்ப்பங்களில்மறந்து விடுவார்! அதுதான் ஆச்சாரியாருக் கிருக்கும் "தனிக் குணம்!"

ஃ

டி. சதாசிவம், தஞ்சை

கே : எங்கள் நேருஜிக்கு உலகத்தில் வளர்ந்துவரும் புகழைப் பார்த்தபிறகுங்கூட திராவிடநாடு திராவிடநாடு என்று கூச்சல் போடுகிறீர்களே, அதைப் பெற உங்களால் முடியுமா?

ப : உங்கள் நேரு டண்டிதரை விட பன்படங்கு அதிகமாகவும், இன்னும் சொல்லப்போனல் உண்மையிலேயே உலக நாடுகளிடை மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்த தலைவர்களின் "புகழ்" விடுதலை இயக்கங்களிடம் என்ன பாடுபட்டது என்பதைச் சற்று அரசியல் யூகத்துடன் சிந்தித்துப் பாருங்கள் சதாசிவனரே, "ஆளைக்கண்டு மயங்காதே அது ஊதுகாமாலை" என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீரா தோழரே!

ஃ

எம். நெடுமாறன், தியாகராயநகர்

கே : ரஷ்யப் பிரதமர் புல்கானின் வந்து சென்ற பின் நம் நாட்டுக்கு இன்னும் யார் வரயிருக்கிறார்கள்?

ப : பொதுத் தேர்தல் நெருங்குவதால் வழக்கம்போல் நேரு பண்டிதர்கள் மீண்டும் பவனி வரக்கூடும்,

ஃ

எஸ். வேலப்பன், கோவை

கே : ஐக்கிய நாடுகளின் சபையில் இந்தியாவின் நிலை எவ்வாறு யிருக்கிறது?

ப : பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற முறையில் இந்தியாவின் நிலை யிருக்கிறது. மக்கள் சீனத்தை ஐ. நா. சபையில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற பிரச்னையில் இந்தியா கையாண்டு வரும் போக்கே இதற்குப் போதிய உதாரணமாகும்.

ஃ

ப கமலநாதன், வேலூர்

கே : அடுத்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு மந்திரி எம். பக்தவத்சலம் முதல் மந்திரியாக வர இப்போதிருந்தே முயற்சிக்கிறாராமே! இது உண்மையா?

ப : தேர்தலில் நின்று அவர் வெற்றி பெறட்டும். பார்க்கலாம்! இதற்குள்ளாகவே ஜோசியம்கேட்க ஆரம்பித்துவிட்டீரே அத்தைக்கு மீசை முளைத்தால்தானே சித்தப்பா!

ஃ

எம், சி. கோபாலன், புதுவை

கே : மொழிவாரி ராஜ்ய அமைப்புப்படி புதுவை காரைக்கால் எந்தப் பகுதியில் சேர வேண்டும்?

ப : தமிழகத்தில்தான். இதில் உங்களுக்கு ஐயப்பாடு என்ன யிருக்கிறது!

ஃ

சி. எம். நமச்சிவாயம், அரக்கோணம்

கே : திராவிட நாடு கிடைத்தால் பிராம்மணர்கள் எப்படி யிருப்பார்கள்?

ப : பிறவியில் உயர்ந்தவர்கள் என்பதாகக் கூறிக்கொண்டு, பெற்றுவரும் சலுகைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, ஒன்றேகுலம் என்ற முறையில் மனிதர்களாக வாழ்வார்கள்,

ஃ

பொ. வைத்தியநாதன், ஆமதாபாத்

கே : அமெரிக்காவில் தமிழர்களை இழிவுபடுத்தி சிலை வைத்திருக்கிறார்களென்று தமிழ் நாட்டில் கிளர்ச்சி செய்தால் சோறு கிடைக்குமா என்று கேட்பார்களா கம்யூனிஸ்டுகள்?

ப : தற்சமயம் ரஷ்யப் பிரதமர் புல்கானின் வருகைக்காக கம்யூனிஸ்டுகள் இருகொடி ஏந்திகளாக நின்று "ஜிந்தாபாத்" கோஷம் போட்டு வருவதால், ரஷ்யப் பிரதமர் திரும்பிச்சென்றவுடனே தாங்கள் குறிப்பிட்டதைப் போல சோற்றாலடித்த பிண்டப் படலத்தை விரிக்கக்கூடும்!

திராவிடர் திருநாளன்று எமது தெவிட்டாத விருந்து : விவரத்திற்கு உடனே எழுதுங்கள்.

- ஆண்டு தோறும் வாசகர்களின் பெரு மதிப்பையும், பேராதரவையும் பெற்று வருகிறது.
- சென்ற ஆண்டு திராவிடன் பொங்கல் மலர்—மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் சிந்தனைக்கும் விருந்தளித்திருக்கிறது.
- சுதேசமித்திரன், இந்து போன்ற தேசிய இதழ்களும் திராவிடன் பொங்கல் மலரின் சிறப்பைப் பொதுவாக பாரட்டி யுள்ளன.
- ஆக—கடந்த எட்டு ஆண்டுகளாக திராவிடன் பொங்கல் மலர்—கழகத் தோழர்களிலிருந்து மற்ற அனைவரின் பாராட்டுதலைப் பெற்று வந்துள்ளது.
- இந்த ஆண்டு, மேலும் சிறப்புற்று விளங்கும் வகையில் திராவிடர் திருநாளன்று திராவிடன் பொங்கல் மலர் தெவிட்டாத விருந்தாகத் திகழும்.
- புத்தம் புதிய அம்சங்கள், கண்களையும் கருத்தையும் கவரும் முகப்பு—கட்டுரை, கதை, கவிதை, அரசியல் குறிப்பு, படங்கள் அனைத்தும் மலரை அலங்கரிக்கும்,

100 பக்கங்கள் : விலை ரூபாய் ஒன்று

முக்கிய குறிப்பு : ஏஜென்டு தோழர்கள், தங்களுக்குத் தேவைப்படும் பிரதிகளுக்கான முன் பணத்துடன் இம்மாத இறுதிக்குள் தெரிவித்துவிட வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் தயவு செய்து மலருக்கென தனியாக ரூபாய் ஒன்று அனுப்பிவைக்க வேண்டும் என்பதையும் நினைவூட்டுகிறோம்.

நிர்வாகி—'திராவிடன்'—சென்னை-1

அச்சிட்டவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோழ அச்சகம், 16, ... தெரு, சென்னை-1